# மாலை தீப்பொறி

MALAE THEEPORI



தென்காசி

2024 அக். 1-15 தொகுதி 23 இதழ் 5 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200



தூத்துக்குடி

## தொழிலாளர் கோரிக்கைப் போராட்டங்கள்



## இலங்கையில் நடந்துள்ள அரசியல் மாற்றத்தை வரவேற்போம்! இலங்கையிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களின் பிரதிநிதியாக அரசாங்கம் செயல்பட வேண்டும் என எதிர்பார்க்கிறோம்!

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தை இகக(மாலெ) வரவேற்கிறது. பொருளாதார நெருக்கடி, மாபெரும் மக்கள் போராட்டங்கள், இலங்கையின் இரத்தம் தோய்ந்த கடந்த கால வரலாறு ஆகியவற்றின் பின்னணியில் மாற்றத்துக்கான வெகு மக்களின் தாகத்தை பிரதிபலிக்கிற வகையில் தேசிய மக்கள் சக்தி (NPP) இயக்கத்தின் அநுர குமார திசநாயக வெற்றி பெற்றுள்ளதை இகக (மாலெ) வரவேற்கிறது. இந்த மாற்றமானது ஒரு நிலையான, மக்கள் சார்புப் பொருளாதாரம், கூச்சலும் குழப்பமுமற்ற அமைதியான சூழல் நிலவக்கூடிய தீவாக இருக்க வேண்டும் என்ற இலங்கை மக்களின் மனநிலையைப் பிரதிபலிக்கிறது. தேர்தல் வாக்குறுதிகளையும் இலங்கை மக்களின் விருப்பங்களையும் நிறைவேற்ற வேண்டிய பெரும் பொறுப்பை புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் கையில் மக்கள் ஒப்படைத்துள்ளார்கள்.

ஜேவிபியும் அநுர குமார திசநாயகவும் மக்களிடத்தில் நம்பிக்கைகளை உண்டாக்கினார்கள். தேர்தலின்போது பல்வேறு வாக்குறுதிகளை அளித்தார்கள். ஜேவிபி, முக்கிய அங்கம் வகிக்கக்கூடிய தேசிய மக்கள் சக்தி இயக்கத்தின் கொள்கைப் பிரகடனமானது, நாட்டின் நலனுக்கு எதிராகச் செயல்படக்கூடிய மற்றும் ஊழல்வாதிகளாக கண்டறியப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை திரும்ப அழைக்கும் உரிமையை நிறுவனமயப்படுத்துவது உள்ளிட்ட ஊழலை வேரோடு பிடுங்கி எறிந்திடும் வலுவான நடவடிக்கைகளுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை சிதைத்த அதானியினுடனான ஒப்பந்தத்தை ரத்து செய்வதாகவும் ஜேவிபி வாக்குறுதி கொடுத்துள்ளது. முக்கியமாக சர்வதேச நிதி நிறுவனம் (IMF), உலக வங்கி (WB)ஆகியவற்றுடனான தமக்கு சாதகமற்ற கடன் நிபந்தனைகள் மீது மறு பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்ற உத்தரவாதங்களும் இருக்கின்றன.

மேலும், பல பத்தாண்டுகளாக ஓரங்கட்டப்பட்ட, துன்புறுத்தல்களுக்குள்ளான, அரசே தலைமை தாங்கி நடத்திய போர் குற்றங்களையும், விடுதலைப்புலிகள் கிளர்ந்தெழுந்தபோது நடத்தப்பட்ட சட்டத்துக்கு புறம்பான சிங்கள பேரினவாத வன்முறைகளையும் எதிர்கொண்ட தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் உள்ளிட்ட அனைத்து மக்களின் நலன்களும் அடையாளமும் பாதுகாக்கப்படும் என்ற வாக்குறுதியும் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஜேவிபியின் கடந்த கால சிங்கள மேலாதிக்க அணுகுமுறை நடவடிக்கைகளும் தேர்தலின் போதும் கூட அது நல்லிணக்கத்திற்கான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளாததும், பன்மைத்துவத்தை உயர்த்திப் பிடிப்போம் சிறுபான்மையினர் நலன் காக்கப்படும் என தேசிய மக்கள் சக்தி இயக்கம் வாக்குறுதி அளித்திருந்தாலும்கூட இலங்கைத் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஜேவிபியின் மீது நம்பிக்கை ஏற்படவில்லை என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பது என்பது இப்போது புதிய அதிபர் மற்றும் அரசாங்கத்தின் கையில்தான் உள்ளது.

இலங்கையின் நிலத்தையும் நீரையும் சர்வதேச சக்திகள் தங்களது போர்த்தந்திர தகிடுதித்தங்களுக்குப் பயன்படுத்திட இலங்கையின் புதிய அரசாங்கம் அனுமதிக்காது என எதிர்பார்க்கிறோம்.

இந்திய- இலங்கை எல்லைப் பகுதியில் தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை இராணுவத்தால் துன்புறுத்தப்படுகிறார்கள், கைது செய்யப்படுகிறார்கள். புதிய அதிபர் பதவியேற்ற பின்னரும்கூட தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். வருங்காலத்தில் இந்தத் துன்புறுத்தல்களுக்கு அச்சுறுத்தல்களுக்கு கைது நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென புதிய அதிபரை கேட்டுக் கொள்கிறோம்.

மோடி அரசாங்கம், இலங்கை மக்களின் விருப்பத் தேர்வை மதிக்க வேண்டும் என்றும், இந்தியாவிற்கு தெற்கேயுள்ள பக்கத்து நாட்டுடன் பரஸ்பர நட்பு, பிராந்திய ஒத்துழைப்பு என்ற உணர்வின் அடிப்படையில் நெருங்கிய பிணைப்பை வளர்க்க வேண்டுமென்றும் நாம் எதிர்பார்க்கிறோம்.

**இகக(மாலெ) விடுதலை**
**மாநிலக் குழு**
**தமிழ்நாடு**

மாலை தீப்பொறி

இருவார இதழ்

*2024 அக்டோபர் 1 - 15*

*தொகுதி 23 இதழ் 5*

முதன்மை ஆசிரியர்

**சங்கர் .வீ**

ஆசிரியர்

**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு

**பழ. ஆசைத்தம்பி**

**பாலசுந்தரம்**

**அ. சந்திரமோகன்**

**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்

**சொ. இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**

***(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)***

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**

3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

**தலையங்கம்**

# போலி மோதல் படுகொலைகள் செய்வதுதான் சமூகநீதி அரசா?

சமீபத்தில் சென்னை உயர்நீதிமன்றம் தமிழ்நாட்டில் நடக்கும் போலி மோதல்கள் பற்றி கவலை தெரிவித்திருந்தது. சமூக விரோதிகளைக் களையெடுப்பதாகச் சொல்லிக் கொண்டு போலி மோதல் படுகொலைகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக, குற்றவாளிகள் காவல்துறையினரைத் தாக்கினார்கள், தாக்க வந்தார்கள் என்று சொல்லி அவர்கள் என்கவுண்டரில் கொல்லப்படுகிறார்கள். குற்றவாளிகள் குளியல் அறையில் வழுக்கி விழுந்து அவர்களுடைய கை, கால் முறிந்து போய் விட்டது என்று கட்டுப் போடப்படுகிறது. காவல்துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள் தப்பிக்க முயற்சி செய்தார்கள், காவலர்களைத் தாக்க வந்தார்கள் என்று அவர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். சமீபத்தில் ஆம்ஸ்ட்ராங்கை கொன்ற முக்கிய குற்றவாளி, காவல்துறையின் கைக்குள் இருக்கும்போதே தப்பிக்க முயன்றதாகக் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து பல சமூக விரோதிகள் என்று அறியப்பட்டவர்கள் என்கவுண்டரில் கொல்லப்பட்டுள்ளார்கள். இம்மாதிரியான கொலையை வரவேற்கும் மனோபாவம் மக்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது என்றும் இது அடிப்படையிலேயே தவறானது என்றும் பிற்போக்குச் சிந்தனை என்றும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பரத சக்கரவாத்தி கூறியுள்ளார்கள். பாலியல் வக்கிரம் மற்றும் பாலியல் வன்முறையால் சிறு குழந்தைகள், டெல்லி நிர்பயா, கொல்கத்தா மருத்துவர் போன்ற இளம் பெண்கள் மிகக் கொடூரமாக பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்படுகிறார்கள். இதைப் பார்க்கின்ற பொதுமக்கள் மத்தியில் இருந்து அந்தக் குற்றவாளிகள் உடனடியாகத் தூக்கில் போடப்பட வேண்டும், என்கவுண்டரில் கொல்லப்பட வேண்டும் என்ற குரல்கள் அதிகரித்து வருகின்றன. இது மாதிரி அரசால் நடத்தப்படும் போலி மோதல்கள் பற்றி முழுமையாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் இது இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு, குற்றவியல் நீதி அமைப்பு முறைக்கு எதிரானது, இது சட்டத்தை, நீதியை நிலைநாட்டும் நீதிமன்றத்தின் செயல்பாடுகளை, நீதி பரிபாலன முறையையே கேள்விக்குள்ளாக்குகிறது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் குருவம்மாள் என்பவர் தன் மகனை போலி மோதலில் கொன்று விட்டார்கள், அதற்கு நீதி வேண்டும் என்று கேட்டுத் தாக்கல் செய்துள்ள வழக்கில்தான் நீதிபதி அவர்கள் மேற்படி கருத்துகளைக் கூறியது மட்டுமின்றி, அந்த போலி மோதலை நிகழ்த்திய என்கவுண்டருக்கு பெயர் பெற்ற அன்றைய காவல் உதவி ஆணையாளர் வெள்ளதுரை உள்ளிட்ட அதிகாரிகள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் ஓய்வு பெறும்போது வகித்து வந்த பதவிக்கும் கூடுதலான ஒரு காவல் அதிகாரி இந்த விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளது வரவேற்கத் தக்கதாகும். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று தண்டனை வழங்குவதும் அரிதினும் அரிதான வழக்கில் மரண தண்டனை வழங்குவதும் கூட அடிப்படை மனித உரிமை மீறல் என்று சொல்கிறபோது, குற்றவாளி நீதிமன்றத்தின் முன் நிறுத்தி விசாரணை நடத்தாமலேயே என்கவுண்டரில் கொன்றுவிடுவது என்பது மிகவும் ஆபத்தானது. பல வழக்குகளில் உண்மைக் குற்றவாளிகள் தண்டனையின்றி தப்பிவிடுகிறார்கள் என்பதற்காக, குற்றவாளியை விசாரிக்காமலேயே கொன்றுவிடுவது நீதி பரிபாலன முறையில்லை என்பது மட்டுமின்றி, அந்தக் குற்றச் செயலுக்குப் பின்னால் இருந்த உண்மைக் குற்றவாளிகளை தப்பிக்க வைப்பதுமாகும். குற்றச் செயல்களுக்குப் பின்னால் இருக்கும் சமூகக் காரணிகள் கண்டு கொள்ளப்படாமல் என்கவுண்டர் கொலை என்பது நாளை மக்களுக்காக போராடுபவர்கள்கூட பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்பட்டு, பொதுப் புத்தியின் வரவேற்பில் படுகொலை செய்யப்படலாம். உடனடி தண்டனை என்ற பெயரில் மரண தண்டனை தீர்வாகாது. இன்றும்கூட பல நூற்றுக்கணக்கான ஏதுமறியா பழங்குடி, இஸ்லாமிய மக்களை பத்தாண்டுகளுக்கும் மேலாக விசாரணையே இன்றி சிறையில் வைத்துக் கொண்டிருக்கும்போது, எதற்காக இந்த என்கவுண்டர்கள்? யாரைக் காப்பற்ற? யாரைப் பலிகடாவாக்க?



# ஒரு நாடு; ஒரு தேர்தல் ஒரு தீய திட்டமாகும்: அதனை ஒட்டுமொத்தமாக நிராகரிப்போம்

**திபங்கர்**

ஹரியானாவுக்கும் மகாராஷ்டிராவுக்கும் 2019 இல் அக்டோபர் 21 அன்று ஒரே கட்டமாக தேர்தல்கள் நடைபெற்றன. தற்போது தனித்தனியாக நடைபெறுகின்றன. மகாராஷ்டிராவிற்கு இன்றுவரையிலும் கூட தேர்தல் தேதிகள் அறிவிக்கப்படவில்லை. அப்படியிருந்தும் மோடி அமைச்சரவை தனக்கு மிகவும் விருப்பமான 'ஒரு நாடு, ஒரு தேர்தல்' (ஓஎன்ஓஈ) நிகழ்ச்சிநிரல் மீது கவனத்தை திசைதிருப்ப மீண்டும் ஒருமுறை முயற்சிக்கிறது. ஓஎன்ஓஈ திட்டம் தொடர்பாக முன்னாள் குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் அதனை அமல்படுத்துவதற்கான தன்னுடைய உறுதியையும் அறிவித்துள்ளது. ஆனால் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அவசியமான அரசமைப்புச் சட்ட திருத்தங்களை மேற்கொள்வதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வேண்டும். மக்களவையிலோ மாநிலங்களவையிலோ மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாத நிலையில் இதனை அமல்படுத்த எந்த மாதிரியான வழிமுறைகளை மிகச்சரியாக இந்த அரசாங்கம் கைகொள்ளும் என்பது குறித்து எந்தத் தெளிவும் இல்லை. இது நிர்வாக ஆணை/அவசர சட்டம் மூலமாக செயல்படுத்தப்படலாம். இதற்கு சட்டமியற்றும் துறையும் நீதித்துறையும் எவ்வாறு எதிர்வினையாற்றும் எனக் காத்துக் கொண்டிராமல், இந்திய மக்களாகிய நாம், இந்த ஜனநாயகத்திற்கு எதிரான யோசனையை நம்முடைய அனைத்து வலிமையையும் கொண்டு நிச்சயமாக நிராகரிக்க வேண்டும்.




அவசர தேர்தல் சீர்திருத்தமாக இந்த யோசனை முன்வைக்கப்படுகிறது. இது தேர்தல் செலவினங்களைக் குறைக்கும், அடிக்கடி நடைபெறும் தேர்தல்களால் ஏற்படும் இடையூறுகளை நிறுத்தி, இடையூறற்ற வளர்ச்சியை ஊக்குவிக்கும் என முன்வைக்கப்படுகிறது. 'வளர்ச்சி'யின் விலையுயர்ந்த இடையூறாக தேர்தல்களை முன்வைத்து, இந்தப் பிரச்சனையை கட்டமைக்கும் விதத்தின் இயல்பிலேயே ஜனநாயகத்திற்கு எதிரான தன்மையுள்ளது. உண்மை என்னவென்றால் முக்கிய அரசியல் கட்சிகள் செலவழிக்கிற ஒட்டுமொத்த தேர்தல் நிதியோடு ஒப்பிட்டால் ஒரு சிறிய பகுதி மட்டுமே தேர்தலை நடத்துவதற்கு அரசு செலவழிக்கிற நிதியாகும். அதிலும் குறிப்பாக மோடி காலத்தில் பாஜக தேர்தல்களை ஒரு பொருளாதார பெருங்களியாட்டமாக மாற்றியுள்ளது. தேர்தல் செலவினங்கள் உண்மையிலேயே குறைக்கப்பட வேண்டுமென்றால் அரசியல் கட்சிகள் செலவழிப்பதற்கு அனுமதிக்கப்படும் நிதிக்கு நிச்சயமாக உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டு, அமல்படுத்தப்பட வேண்டும். இதற்கு தற்போது எந்த உச்ச வரம்பும் இல்லை. அதோடு ஒவ்வொரு தேர்தலை ஒட்டியும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அமலுக்கு வரும் நடத்தை விதிமுறைகள் 'வளர்ச்சி'யை தடுப்பதில்லை. அது, சம்பந்தப்பட்ட அரசாங்கம் புதிய திட்டங்களையும் கொள்கைகளையும் அறிவிப்பதிலிருந்து மட்டுமே அதனை தடுக்கிறது.

ஆக மொத்தத்தில் செலவைக் குறைத்தல், இடையூறற்ற வளர்ச்சி என்ற தர்க்கம் ஒரு பூச்சாண்டி மட்டுமே. உண்மையில் கோவிந்த் கமிட்டி அறிக்கை ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடத்துவதை நிச்சயமாக உறுதி செய்யவில்லை. அது மக்களவை, சட்டமன்ற தேர்தல்கள் முடிந்து 100 நாட்களுக்குள் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என பேசுகிறது. அதற்கு அர்த்தம் என்னவென்றால் மக்கள் பிரதிநிதித்துவத்தின் மூன்று அடுக்குகளுக்கும் தேர்தல்களை நடத்துவதற்கான தேர்தல் காலம் பல மாதங்களுக்கு நீட்டிக்கப்படும் என்பதாகும். ஒருவேளை ஒரு அரசாங்கம் தனது பெரும்பான்மையை தனது பதவிக் காலத்திற்கு முன்னதாகவே இழந்துவிட்டால் இடைத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கம் மீதமுள்ள ஆண்டுகளுக்கு மட்டுமே

ஆட்சியில் இருக்கும். முழு ஐந்து ஆண்டுகளுக்கு இருக்காது என முன் வைக்கப்பட்டுள்ளது. இந்த முறையில் நாம் அதிக தேர்தல்களை, இரண்டு வேறுபட்ட மதிப்புகளை கொண்ட வாக்குகளுடன் எதிர்கொள்ள வேண்டிய நிலை வரலாம். இடைத்தேர்தலில் அளிக்கப்படும் வாக்கு குறைக்கப்பட்ட மதிப்புடையதாகவும், பொதுத்தேர்தலில் அளிக்கப்படும் வாக்கு முழுமையான ஐந்து ஆண்டுகளின் மதிப்புடையதாகவும் இருக்கும்.

அரசமைப்புச்சட்டம் இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியமாக காட்சிப்படுத்தியிருக்கிறது. இங்கு மாநிலங்கள் தங்களுக்குரிய உரிமைகளுடன் முழுமையாக ஒன்றியத்தில் இணையும். கூட்டமைப்பு அல்லது கூட்டாட்சி என்னும் கூற்று அரசமைப்புச் சட்டத்தில் தெளிவாக பயன்படுத்தப்படவில்லை. இருந்தபோதும் கட்டமைப்பு தெளிவாகவே கூட்டாட்சி தான்; நிச்சயமாக ஒற்றையாட்சி அல்ல. இந்திய அரசமைப்புச் சட்ட கட்டமைப்புக்கு எதிராக ஆர்எஸ்எஸ் எப்போதும் ஒரு ஒற்றையாட்சி இந்தியாவையே ஏற்றுக்கொள்கிறது. 1956 இல் மாநிலங்களின் மறுசீரமைப்பு கமிட்டியின் அறிக்கை வெளியிடப்பட்ட பிறகு எழுதப்பட்ட ஒரு கட்டுரையில், “நமது நாட்டின் அரசமைப்புச் சட்டக் கூட்டாட்சி கட்டமைப்பு பற்றிய அனைத்து பேச்சுகளையும் நாட்டின் நன்மைக்காக ஆழக்குழி தோண்டி புதைக்க வேண்டும்; ஒரு மாநிலத்திற்குள் இருக்கும் ‘தன்னாட்சி’, அரை-தன்னாட்சி ‘மாநிலங்களின்’ இருத்தலை துடைத்தெறிய வேண்டும்; அதாவது நமது ஒருங்கிணைந்த ஒத்திசைவுக்கு பேரழிவு விளைவிக்கும் வாய்ப்புகளை வழங்கும் பெருமைகளாக உள்ள கூறுகள், மண்டலங்கள், இனங்கள், மொழிகள், பிற வகைகளின் எவ்வித தடயமும் இன்றி ஒரு நாடு, ஒரு அரசு, ஒரு சட்டமன்றம், ஒரு நிர்வாகம் உடையதாக பாரதம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்” என ஆர்எஸ்எஸ் தலைவர் கோல்வால்கர் வெட்கமின்றி ஒற்றையாட்சி மாதிரிக்கு ஆதரவாக வாதிட்டார்.

ஜம்மு காஷ்மீர் போன்ற மாநிலத்தின் மாநில அந்தஸ்தை பறித்து, இரண்டு யூனியன் பிரதேசங்கள் என இரண்டாக பிரித்த போது, டெல்லிக்கு மாநில அந்தஸ்து வழங்குவதற்கு மாறாக அதனுடைய ஆட்சி நிர்வாகத்தின் அரசமைப்பு சட்ட உரிமைகள் பறிக்கப்படுகிற போது, மத்திய அரசால் மாநிலங்களின் நிதி உரிமைகள் திட்டமிட்ட வகையில் திருடப்படுகிற போது, விரிவாக்கவாத மத்திய அரசின் புகழப்படும் நகர்மன்றங்கள் அல்லது காலனிகளுக்காக மாநிலங்களின் முக்கியத்துவம் குறைக்கப்படுவதற்கான முயற்சிகளை நாம் தெளிவாகக் காணலாம். மாநிலத் தேர்தல்களை மக்களைவைத் தேர்தல்களுக்கு அடிபணியச் செய்யும் தற்போதைய தெளிவான முயற்சியே ஒரு நாடு ஒரு தேர்தல் ஆகும். மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சியில் இருந்தால் வளர்ச்சிக்கு சிறந்த உத்தரவாதம் கிடைக்கும் என்ற தத்துவமான ‘இரட்டை என்ஜின் அரசாங்கம்’ என்ற நிலையாக ஒலிக்கும் மந்திரம், மையப்படுத்துதல் திட்டத்தை ஒப்புக் கொள்ளுகிற மற்றொரு நிகழ்வாகும். சந்தேகத்திற்கிடமின்றி இது இந்தியாவின் நாடாளுமன்ற ஜனநாயகத்தை அதிகரித்த அளவில் அதிபர் முறையுடையதாக மாற்றியமைக்கும். மோடி வழிபாடு தற்போது மிகவும் வெளிப்படையானதாக ஆகிவிட்டது. தேர்தலுக்குப் பிறகு தேர்தலாக அவருடைய பெயரைச் சொல்லி அவர் வாக்கு கேட்கிறார். ஆக ‘ஒரு கட்சி, ஒரு தலைவர்’, என்ற துணைத் தலைப்பை அதனுடன் நாம் சேர்க்கும் போது மட்டுமே இந்த ‘ஒரு நாடு, ஒரு தேர்தல், என்ற முழக்கம் முழுமை அடைகிறது.

மோடி ஆட்சியைப் பொறுத்தவரையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான, எந்த வழியிலேனும் அதில் நிலைத்திருப்பதற்கான ஒரு சடங்கு தான் தேர்தல்களாகும். மோசடியாக வாக்குகளை எண்ணுகிற வெட்கக்கேடான சண்டிகர் மாதிரியையும், கட்சிகளை உடைத்து பின் கதவு வழியாக அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆபரேஷன் தாமரையின் தொடர் நடவடிக்கைகளையும் நாம் பார்த்துள்ளோம். “ஒரு நாடு, ஒரு தேர்தல்” திட்டமென்பது தேர்தல்களின் மூலமாக அவர்களின் குரல்கள் கேட்கப்படுகிற மக்களின் உரிமைக்கு வரம்பு நிர்ணயிக்கிறது. அதன்மூலம் தேர்தல்கள் சிறுமைப்படுத்தப்படுவதை நிறுவனமாக்கும். இதனை நோக்கமாக கொண்டிருப்பது தான் “ஒரு நாடு, ஒரு தேர்தல்” திட்டமாகும்.

அரசியல் கட்சிகளால் செலவழிக்கப்படும் தேர்தல் செலவினங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயிப்பது, தேர்தல் ஆணையம் நடுநிலையை பராமரிப்பதை உறுதி செய்ய தேர்தல் ஆணையர்கள் நியமனம் சம்பந்தமான சட்டத்தை திருத்துதல், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஒரு கட்சியில் இருந்து விலகி இன்னொரு கட்சியில் சேருவதற்கு முன்பு தங்கள் பதவியில் இருந்து விலக வேண்டும் என்பதை கட்டாயமாக்குவது, திரும்பப்பெறும் உரிமையை அறிமுகப்படுத்துவதன் மூலம் வாக்காளர்களை அதிகாரம் பெற்றவர்களாக மாற்றுவது ஆகியவைதான் உண்மையிலேயே தற்போது தேவைப்படுகிற அவசர தேர்தல் சீர்திருத்தங்கள் ஆகும். ‘ஒரு நாடு, ஒரு தேர்தல்’ என்பது ஜனநாயகத்திற்கு எதிரான மோசமான யோசனையாகும். அது முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

**தமிழாக்கம்– செந்தில்**

# மது ஒழிப்பு அரசியல்!?



மது ஒழிப்பு மிகவும் அவசியமானது. இனியும் தட்டிக் கழிக்க முடியாது. தமிழகத்தையே நடுநடுங்கச் செய்த, கள்ளக்குறிச்சி, கருணாபுரம் நச்சுசாராய நிகழ்வு இதையே வற்புறுத்துகிறது. துயரநெருப்பில் வெந்துமடியும் கருணாபுரம் மக்களைச் சந்தித்த, இகக(மாலெ) மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி தலைமையிலான குழுவிடம், “ஏழை, பாழைகளின் உயிரைப் பறிக்கும் ‘எமன்’ டாஸ்மாக் கடைகளை மூடச் சொல்லுங்கள்..” என்று ஒரே குரலில் கதறி அழுதனர். கருணாபுரம் மக்களை கருணையின்றி கொன்றுகுவித்த அந்த துயர நிகழ்வுக்குப்பின், மது இல்லா தமிழகம், போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு எனும் கோரிக்கை முன்பைவிட பலமடங்கு வலுத்து வருகிறது.

இந்த பின்னணியில் விசிக அறிவித்துள்ள மதுஒழிப்பு-பெண்கள் மாநாடு வரவேற்கத்தக்கது ஆட்சியிலிருக்கும் திமுகவின் கூட்டணி கட்சியான விசிகவின் மதுஒழிப்பு மாநாடு திமுகவுக்கு நெருடலை ஏற்படுத்தியிருக்கும். விசிகவும் மிகக் கவனமாகவே, தேசிய அளவில் மது ஒழிப்பு கொள்கைக்கு திமுக உள்ளிட்ட கட்சிகள் ஒன்றிய அரசை வலியுறுத்த அழைப்பு விடுத்திருந்தது. எனவே திமுகவும் அமைதியாகவே இருந்தது. மது ஒழிப்பு மாநாட்டிற்கு அதிமுகவை அழைத்திருக்கிறோம் என்று விசிக அறிவித்த உடன் அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியது. திமுக கூட்டணியில் விரிசல், அணிமாறுகிறதா விசிக? 2026ல் புதிய கூட்டணிகள் ஏற்படுமா? என்று ஊடகங்கள் உசுப்பிவிட்டன. அதிமுகவை அழைக்கும் போது பாமக, பாஜகவை ஏன் அழைக்கக் கூடாது? நாங்களும் மதுஒழிப்பு கொள்கை உள்ளவர்கள்தான் என்று (அணிமாற்ற கணக்கோடு) ராமதாஸ் கூறினார். மதவாத, சாதியவாத சக்திகளோடு கைகோர்க்கமாட்டோம் என்று திருமாவளவன் கூறிவிட்டார். இதற்கிடையில் அதிகாரத்தில் பங்கு என்ற விசிகவின் வீடியோ ஊடகங்களில் பரவியது. இந்த வீடியோ நீக்கப்பட்டது. மீண்டும் பதிவேற்றப்பட்டது. ‘அதிகாரத்தில் பங்கு’ அரசியல் களத்தை மீண்டும் ஒரு சுற்று சூடாக்கியது. ஏற்கனவே, காங்கிரஸ் மாநிலத்தலைவர் செல்வப்பெருந்தகை, காமராஜர் ஆட்சி அமைக்கவேண்டும்; எத்தனை காலத்துக்கு மற்றவர் பின்னால் ஓடிக்கொண்டிருப்பது என்று பேசியிருந்தார். இதற்கு சுற்றிவளைத்து திமுக தலைவர்கள் கருத்துக் கூறினார்கள். 2026 தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளைப்பெற திமுக கடுமையாக பாடுபட வேண்டும் என்று திமுகவின் மூத்த அமைச்சர்களும் துணைமுதலமைச்சர் போல் செயல்பட்டுக்கொண்டிருக்கும் உதயநிதி பேசியதும் சூட்டை கூடுதலாக்கியது. மத்தியில் ‘கூட்டாட்சி’ காணும் திமுக, மாநிலத்தில் மட்டும் ஏன் ‘சுயாட்சி’ நடத்த வேண்டும் பத்திரிகையாளர் கார்த்திக் பாஜக கோணத்திலிருந்து நக்கலாக கேள்வி எழுப்பியிருந்தார்.

திமுக ஆட்சி மதுஒழிப்பை அறிவித்தால் 2026ல் திமுக வின் வெற்றியை யாராலும் தடுத்து நிறுத்தமுடியாது என்று கூறி திமுக கூட்டணிமீதான தனது உறுதிப்பாட்டை திருமாவளவன் வலியுறுத்தினார்.

இதற்கிடையில், விசிக மாநாட்டில் கலந்துகொள்ள ‘முறைப்படி’ அழைப்பு வந்தால் பரிசீலித்து முடிவெடுப்போம் என்று தாமதமாக எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

இதற்கு விசிக தரப்பிலிருந்து பதிலில்லை. மதுஒழிப்பு மாநாடு, திமுக கூட்டணிக்குள் (இந்தியா கூட்டணி) உரசலை உருவாக்கியதை மறுக்க முடியாது. எனவேதான், கூட்டணிக்குள் “விரிசலும் இல்லை உரசலும் இல்லை” என்று மீண்டும் மீண்டும் அறிவித்தார். திருமா, தேர்தல் சமயத்தில்தான் விசிக அரசியல் கட்சி, மற்ற சமயத்தில் அது அம்பேத்கர் கட்சி, பெரியார் கட்சி என்றும் வலியுறுத்தினார்.

முதலீட்டை ஈர்க்க ஸ்டாலின் அமெரிக்கா சென்றிருந்த சமயத்தில், நடந்த இந்த சூடான நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் திருமாவளவன் உள்ளிட்ட தலைவர்கள் ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். திமுகவிலிருந்து ஆர்எஸ் பாரதியும் டிகேஎஸ் இளங்கோவனும்

மதுஒழிப்பு மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என்று அறிவித்து ஸ்டாலின் முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாக கருதப்பட்டது. ஆனாலும் இந்த உரசலை சிபிஅய்(எம்) பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி நினைவேந்தல் நிகழ்விலும் கூட காணமுடிந்தது. யார் நினைத்தாலும் திமுக கூட்டணியை எதுவும் செய்யமுடியாது என்ற உரத்த குரலை கேட்க முடிந்தது. சில நாள் கழித்து, நான்காண்டு அனுபவம் கொண்ட உதயநிதி துணைமுதல்வராக ஆசைப்படும்போது நாற்பதாண்டு அனுபவமுள்ள திருமாவளவன் துணை முதல்வராக ஆசைப்படக் கூடாதா எனக் கேட்டு மீண்டும் பற்ற வைத்துள்ளார் விசிக துணைப்பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுன்! மதுஒழிப்பு மாநாடு அறிவித்ததில் இருந்து விசிக அரசியல் களத்தில் முதன்மை பேசுபொருளாக தன்னை நிறுத்திக் கொண்டது.

ஆனால் மதுஒழிப்பு பற்றிய பரப்புரையை விட கூட்டணி தொடர்பான பரபரப்புரையே மேலோங்கி நின்றது. அனைத்தும் 2026 தேர்தல் நோக்கிய பரப்புரையாகவே இருந்தது. முக்கிய கட்சிகளுக்கு மதுஒழிப்பில் ஆர்வமோ அக்கறையோ இல்லை என்பதையும் இந்த விவாதக் களம் தெளிவுபடுத்தியுள்ளது.

சமீபத்தில், நீடித்த வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளதாக நிதிஆயோக் அறிக்கைகளை சுட்டிக்காட்டி திமுக அரசு விளம்பரம் செய்து கொண்டது. ஆனால், டாஸ்மாக் மூலம் ஆறாக ஓடும் சாராயம், அந்த வளர்ச்சிக் குறியீடுகளையெல்லாம் அழித்துக் கொண்டிருக்கிறது. 1983 ல் அதிமுக ஆட்சியில், 30 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்ட டாஸ்மாக் '84ல் ரூ 139 வருவாய் ஈட்டியது. 2023-24 ல் ரூ 45,855 கோடி வருமானத்தை ஈட்டியுள்ளது. கடந்த 40 ஆண்டுகளில் 130 மடங்கு வருவாய் அதிகரித்துள்ளது! தமிழ்நாட்டின் சொந்த வரிவருவாயில், 29% 5000 மதுக்கடைகள், 3000 பார்கள் உள்ள டாஸ்மாக்கிலிருந்தே வருகிறது.

சமூகநலத்திட்டங்கள் வாயிலாக அரசு கொடுக்கும் பணத்தை டாஸ்மாக் வழியாக திருப்பி எடுத்துவிடும் பொருளாதார வழிமுறையாகவே டாஸ்மாக் கடைகளை அதிமுக ஆட்சி நடத்தியது. அதே பாதையையே திமுக ஆட்சியும் பின்பற்றுகிறது.

நலத்திட்டங்களுக்காக அறியப்பட்ட தமிழ்நாடு, தனது நலத்திட்டங்களுக்காக டாஸ்மாக் வருவாயை எதிர்பார்த்து இருப்பது இழுக்கானது. இது அளவிடமுடியாத சமூகத் தீங்குகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டின் பெண்கள் தொகையில் 10.7% விதவைகள் (38.51 லட்சம்). இவர்கள் விதவைகளாவதற்கு முதன்மை காரணம் டாஸ்மாக் சாராயக் கடைகள். ஒரு ட்ரில்லியன் பொருளாதாரத்தில் (மனித) உழைப்பு சக்தி முக்கியமானது என்று முதலமைச்சரும் பேசிவருகிறார். இந்த மனித மூலதனத்தை, நல்ல சாராயமும் நச்சுசாராயமும் போதைப்பொருளும் தள்ளாடும், தடுமாறும் சமுதாயமாக மாற்றிவிட்டது. தள்ளாடும் சமுதாயத்தால் எப்படி உற்பத்தி வளர்ச்சி அடையும்? தமிழ்நாட்டின் மனித வளர்ச்சிக் குறியீடுகள், சமூகநீதி பெருமைகள் பற்றி எழுதிக் குவிக்கும் ஆய்வாளர்களும் அறிஞர்களும் டாஸ்மாக் இழைக்கும் சமூக அநீதி பற்றி ஆய்வு செய்வதில்லை.

அதிமுக, திமுக ஆட்சி காலங்களில் தொடர்ந்து டாஸ்மாக் கடைகளை மூடவேண்டுமென பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். அதிமுக ஆட்சி, இந்தப் போராட்டங்களை கடுமையாக ஒடுக்கியது. ஆகையால் பெண்கள் அணிதிரண்டு அதிமுகவை தோற்கடித்தனர். பெண்களின் கோபத்தை புரிந்துகொண்ட திமுக டாஸ்மாக் கடைகளை மூடுவதாக தேர்தல் வாக்குறுதியளித்து வெற்றியும் பெற்றது. விடியல் பயணம், காலை உணவு போன்ற நல்லதிட்டங்களை நடத்தி வருகிறது 'சமூகநீதி' திமுக ஆட்சி. ஆனால் பெண்கள் கைகளுக்குச் செல்லும் பணத்தின் பெரும்பகுதியை டாஸ்மாக் கடைகள் பிடுங்கிக் கொள் வது ஆட்சியாளர்களுக்கும் தெரியும். ஆட்சியாளர்களுக்கு நெருக்கமாக உள்ள மது உற்பத்தியாளர்கள் கருணாபுரங்களை உற்பத்திசெய்கிறார்கள் என்பதையும் மறந்துவிட முடியாது. பெண்களது உண்மையான மகிழ்ச்சிக்கு, சமூகநீதிக்கு வழிவகுக்கும் டாஸ்மாக் கடைகளை மூடுமா? விசிக மதுஒழிப்பு மாநாடு, திமுகவின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு இட்டுச்செல்லுமா? எது எப்படியாயினும் இடது சக்திகளும் உழைக்கும் வர்க்கமும் பெண்களும் மது இல்லாத, போதை இல்லாத தமிழ்நாட்டிற்காக தொடர்ந்து போராடியாக வேண்டும். இந்த நோக்கத்துடன்தான், மா லெ கட்சியும் அதன் வெகுமக்கள் அமைப்புகளான அவிகிதொச, பெண்கள் கழகம், ஏஅய்சிசிடியு உள்ளிட்ட அமைப்புகள் அக்டோபர் 1 அன்று, ஒன்றியங்களில் நடத்தும் கிளர்ச்சிகளில் வீடு, வேலை,அடிப்படை வசதிகள், கல்வி, மருத்துவம் தொடர்பான கோரிக்கைகள் மட்டுமின்றி டாஸ்மாக் கடைகளை மூடவேண்டுமென்ற கோரிக்கையையும் வலியுறுத்துகிறது.

**–அரசியல் பார்வையாளன்**

# "வாரிசு அரசியல்... பெரும்தொழில் நிறுவனங்களில் இருந்தே துவங்குகிறது;.. முதலாளித்துவத்தின் கருவான பகுதிகளில்தான்; வாரிசு வழியான மாற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்".

இகக(மாலெ) பொதுச்செயலாளர் திபங்கர்,
பிடிஅய்4 நாடாளுமன்றத்தெரு சேனலுக்கு அளித்த சிறப்பு நேர்காணல்; தமிழாக்கம்- மதிவாணன்
....சென்ற இதழின் தொடர்ச்சி

**இந்தத் தேர்தலின் மிகப்பெரிய ஆச்சரியங்களில் ஒன்று காங்கிரஸ் கட்சி பெற்ற வாக்குகள். அவர்கள் பெற்ற இடங்கள் இரண்டு மடங்குக்கு மேல் அதிகமாயிருக்கிறது. இறுதியாக; ராகுல் காந்திக்கு. முதிர்ச்சி வந்துவிட்டது என்று நினைக்கிறீர்களா? அவருடைய செயல்பாடு பற்றி உங்கள் கருத்து என்ன?**



நீங்கள் சொன்னது போல காங்கிரஸ், வென்ற தொகுதிகள் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளன. வாக்குகள் 2 சதம் அதிகரித்துள்ளது. வழக்கமாக காங்கிரஸ் போட்டியிடும் தொகுதிகளைவிட இம்முறை, 100 தொகுதிகள் குறைவாகவே போட்டியிட்டது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, குறிப்பிடத்தக்க அளவுக்கு வாக்குகளை காங்கிரஸ் மீட்டுக்கொண்டுள்ளது. ஆக, இது பாஜகவிற்கான பின்னடைவு என்பது தெளிவு. திரு ராகுல் காந்தி மிகப்பெரிய பாத்திரம் வகித்திருக்கிறார் என்பது உறுதி. மீண்டு வர வேண்டுமென்றால், புதிய விஷயங்களை கண்டுகொள்வது அவசியம் என்று காங்கிரசும் புரிந்துகொண்டுள்ளது என்றே நினைக்கிறேன்.

உதாரணமாக, சாதிவாரி கணக்கெடுப்பு, இட ஒதுக்கீட்டைப் பற்றிச் சொல்லலாம். இதுபோன்ற விஷயங்களில் காங்கிரஸ் இதுவரை இந்த அளவுக்குப் பேசியதில்லை. இப்பிரச்சனைகளில் காங்கிரஸ் ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. மற்ற கட்சிகளுடன் சேர்ந்து நிற்கும் வாய்ப்புகளையும் பயன்படுத்துகிறது. ஆனால், அக்கட்சி ஒருபோதும் முன்முயற்சி மேற்கொள்வதில்லை. அதானி பற்றி, சலுகைசார் முதலாளித்துவம் பற்றி ராகுல் காந்தி பேசுகிறார். காங்கிரசில் மற்ற தலைவர்கள் இதுபற்றியெல்லாம் பேசுவதில்லை. காங்கிரசின் திசைவழியில், அதன் கொள்கைகளில், ஓரளவிற்கு மாற்றம் தேவையாக இருக்கிறது என்பதுதான் நான் சொல்ல வரும் கருத்தாகும். காங்கிரஸ் மீண்டு வருவதற்கு இவை உதவியாக இருக்கும். இந்தியாவில் ஜனநாயகத்தை மீட்டெடுப்பதற்கு காங்கிரஸ் மீண்டு எழுவது மிக முக்கியமானதாக இருக்கிறது. ஏனென்றால், பாஜகவிற்கு அடுத்து அகில இந்திய அளவுக்கு செல்வாக்குள்ள ஒரே கட்சி காங்கிரஸ்தான்.

(இடதுசாரிகளாகிய) நாங்களும், கருத்தியலில், திட்டத்தின் அடிப்படையில் தேசியக் கட்சிகள்தான். ஆனால், நாங்கள் சில மாநிலங்களுக்குள் சுருங்கியிருப்பதால் இப்படி குறிப்பிடுகிறேன். காங்கிரசுக்கும் ராகுல்காந்திக்கும் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாரிசுகளின் கட்சி என்று காங்கிரஸ் கிண்டலடிக்கப்படுகிறது. காங்கிரஸ் கட்சி இந்த குற்றச்சாட்டிலிருந்து வெளியே வரும் என்று நினைக்கிறீர்களா? இப்போது வயநாட்டில் பிரியங்கா போட்டியிடப் போகிறார். அப்படிப் போட்டியிடுவது இந்த குற்றச்சாட்டுக்கு வலுவூட்டத்தானே செய்யும்?**

இந்தியாவில் வாரிசு அரசியல் இருக்கிறது என்று நான் பார்க்கவில்லை. பாஜக, வாரிசு அரசியலை ஒரு குற்றம் என்று ஆக்கியிருக்கிறது. பாஜகவில் வாரிசு அரசியல் இல்லை என்பது போல பேசுகிறது. வாரிசு அரசியலையும் அரசியலையும் பாஜக இணைக்கப் பார்க்கிறது. பாஜகவைப் பொறுத்தவரை வாரிசு அரசியலும் ஊழலும் ஒன்றுதான், நாணயத்தின் இரண்டு பக்கங்கள்தான். அவர்களின் வாதம் மிகவும் பலவீனமான வாதம். உதாரணமாக, நீங்கள் வாரிசு அரசியல் பற்றி பேச வேண்டுமென்றால், முதலில் அதனை தொழில் நிறுவனங்களில் துவங்க வேண்டும். அங்கே மிகப்பெரிய அளவிலான சொத்துடைமையும், செல்வ உடைமையும் வாரிசு அடிப்படையில்தான் நடக்கிறது. அங்கேதான், முதலாளித்துவத்தின் கருவான பகுதிகளில்தான், பரம்பரை வழியான மாற்றம் முதலில் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

மேலும், ஒவ்வொரு பதவியிலும் ஒவ்வொரு தொழிலிலும் இது ஏதாவது ஒரு வகையில் நடக்கிறது. நமது சமூகத்தில் சமூக இயக்கம் பற்றாக்குறையாக இருக்கிறது. தனிநபரின் தனித்துவம் பற்றாக்குறையாக இருக்கிறது. தனி நபரின் உரிமையை, தனித்துவம் என்பதை அங்கீகரிப்பதே நமது சமூகத்தில் பிரச்சனையாக இருக்கிறது. நமது சமூகத்தில், எங்கு பார்த்தாலும், நீதித்துறையைப் பார்த்தாலும்,

மருத்துவத்துறை பற்றிப் பேசினாலும், வேறு எந்தத் தொழிலைப் பற்றிப் பேசினாலும் அங்கே பரம்பரையின் தொடர்ச்சி காணப்படுகிறது. எனவே, அரசியலை மட்டும் தனிமைப்படுத்தி பரம்பரை தொடர்ச்சி என்று பேசுவது தவறானது. பரம்பரை அரசியலுக்கும் ஊழலுக்கும் தொடர்பு இருக்கிறது என்று பேசுவது அடிப்படையற்றது.

ஊழல் இருக்கிறதென்றால் அங்கே அதிகாரம் இருக்கும். அதிகாரம் இருந்தால் அது ஊழலுக்கு வழி வகுக்கும். முழுமையான அதிகாரம் முழுமையான ஊழலுக்கு வழி வகுக்கும். முழு அதிகாரமும் ஒருவர் கையில் இருந்தால், அது கட்டுப்படுத்தப்படாத ஒன்றாக ஆகிவிடுகிறது. அப்படியாகும்போது அதிகார வட்டங்களில் ஊழல் உருவாவது நிச்சயம்.

எனவே, நாட்டில் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்பாட்டு அமைப்புகளும், சரி செய்யும் அமைப்புகளும் இருக்க வேண்டும். இதுதான் ஊழலைத் தடுப்பதற்கான ஒரே வழி. பரம்பரை அரசியல்வாதிகள் என்று பார்த்தால் அவர்கள் பாஜகவில்தான் அதிக அளவில் இருக்கிறார்கள். பாஜகவினர் காந்தி- நேருவின் வாரிசுகள் பற்றி பேசுகிறார்கள். அதே பாஜகவில் மேனகா காந்தி, வருண் காந்தி என, அதே நேரு- காந்தி வாரிசுகள் இருக்கிறார்கள். அவர்கள் இப்போது பாஜக அரசியல் கட்டமைப்பின் முக்கியப் பொறுப்புகளில் இல்லை என்பது உண்மைதான். பாஜகவினர் எந்த பரம்பரை பற்றி பேசினாலும், அந்த பரம்பரை பாஜகவிலும் இருக்கிறது. ஆக, இது ஈயத்தைப் பார்த்து இளிச்சதாம் பித்தளை என்பது போல இருக்கிறது. மற்றவர்களை விமர்சிக்கும் ஒருவர் தன்னைப் பற்றியும் பரிசீலித்துக் கொள்ளவேண்டும்.

**இந்த தேர்தலின்போது; இதுவரையில்லாத அணி சேர்க்கையாக; சிவசேனை முதல் எம்எல் வரை மிகப்பெரிய வண்ண அணி சேர்க்கை நிகழ்ந்துள்ளது. இந்த அணிச் சேர்க்கையை மக்கள் எப்படி பார்த்தார்கள்? இந்த விநோதமான அணிச் சேர்க்கையை மக்கள் ஏற்றுக்கொள்ள வைப்பது ஒரு பிரச்சனையாக இல்லையா?**

இல்லைவே இல்லை. இந்தமுறை தேர்தலின், முதன்மையான பிரச்சனையாக ஜனநாயகத்தையும் அரசியல் சட்டத்தையும் 'பாதுகாக்க வேண்டும்' என்பது இருந்தது. ஜனநாயகத்திற்கு அபாயம், அரசியல் சட்டத்திற்கு ஆபத்து என்று வருகிறபோது, ஜனநாயகத்தையும் அரசியல் சட்டத்தையும் காப்பதற்காக மிகப்பெரிய கூட்டணி ஒன்றைக் கட்டமைப்பது அவசியமாகிறது. கடந்த ஆண்டுகளில், கோவிட் காலத்தின்போது சிவசேனையின் பாத்திரத்தைப் பார்க்கும்போது, மற்ற பல கட்சிகள் போல, சிவசேனா தன்னைத்தானே சிறிதளவு ஆய்வு செய்து மாற்றிக்கொண்டுள்ளது. எனவே, அது ஒரு பிரச்சனையில்லை என்று தோன்றுகிறது. சிவசேனாவும், ஆர்ஜேடியும், சிபிஐஎம்எல் கட்சியும் பீகாரில் கூட்டணி அமைப்பதாக இருந்தால்தான் பிரச்சனையாக இருக்கும். சூழ்நிலை என்னவாக இருக்கிறது என்பதை மக்கள் புரிந்துகொள்கிறார்கள். இது போன்ற நிலைமைகளில் என்ன செய்யப்பட வேண்டும் என்பதையும் மக்கள் புரிந்துகொள்கிறார்கள். எனவே இது பிரச்சனையாக இல்லை.

**உலக அளவில் பேசும்போது; இடதுசாரி அரசியல் பழைய விஷயம் என்றாகி வருகிறது. சீனாவில் கூட உண்மையான பொருளில் பார்த்தால் இடதுசாரி அரசியலாக இல்லை. அப்படியிருக்கும்போது; இடதுசாரி அரசியலுக்கு நினைவஞ்சலி எழுதுவது அவசரப்பட்ட செயலாகிவிடுமா?**

அப்படிச் செய்வது அவசரப்பட்ட செயல்தான். அது எப்போதும் அவசரப்பட்டு செய்யப்பட்ட காரியமாகவே இருக்கும். .... நான் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை அடிக்கடி படித்து வருகிறேன். நீங்கள் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை இப்போது படித்துப்பாருங்கள். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை இப்போதுதான், நேற்றுதான் எழுதப்பட்ட ஒன்று என்பதாக நீங்கள் உணர்வீர்கள். (நடந்தவற்றை) எதிரொலிக்கும் ஒன்றாக, நிகழ்வுகள் அடுத்தடுத்து அரங்கேறும்போது, அவற்றின் சாரத்துடன் பிணைந்துள்ள பொருத்தமுள்ளதாக, அந்தச் சூழலுடன் பிணைக்கப்பட்ட பொருத்தப்பாடு உள்ளதாக கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை உள்ளது. எனவே மக்கள், புதிதாக, புதியதான வழிமுறைகளில் இடதுசாரி அரசியலை மறு கட்டமைப்பு செய்வார்கள்.

பொருளாதார நீதியைப் பற்றிதான் இடதுசாரிகள் பேசுகிறார்கள்; பொருளாதாரத்தை மறு வினியோகம் செய்வது, வேலையின்மை பிரச்சனைக்கு முடிவு கட்டுவது, வறுமையை ஒழிப்பது, இன்னும் பிற விஷயங்கள் குறித்துதான் இடதுசாரிகள் பேசுகிறார்கள். ஜனநாயகம் பற்றி கவலைப்படுவதில்லை, தனிநபர் சுதந்திரம் பற்றி கவலைப்படுவதில்லை என்றெல்லாம் இடதுசாரி இயக்கத்தின் மீது விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. இந்த விமர்சனங்கள் முழுவதும் பொருத்தமற்றவை என்று சொல்ல மாட்டேன்.

சோவியத் யூனியன் வீழ்ந்ததற்கு அதுதான் (தனிநபர் சுதந்திரம், ஜனநாயகம்) பிராதான காரணம். நீங்கள் மார்க்ஸ், ஏங்கல்ஸ் எழுதிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையைப் படித்துப் பார்த்தீர்கள் என்றால், அந்த எழுத்துகள் விடுதலையை நோக்கமாகக் கொண்டவை என்பது புரியும். அவை மிகவும் ஜனநாயகப்பூர்வமானவை. அவை ஆழமான ஜனநாயகம் பற்றியவை. எனவே, அந்த அளவு ஆழமான ஜனநாயகம் பற்றிய உள்ளடக்கம் உண்மையில் (உள்வாங்கப்பட்டு) வெளிப்படுத்தப்படவில்லை. இது கவலைப்பட வேண்டிய ஒரு அம்சம்.

மற்றொரு அம்சம் என்னவென்றால், நமது அரசியல் முழுமையும் பருவநிலை மாற்ற நெருக்கடி பற்றி பேச வேண்டும். அதுதான் இந்த நூற்றாண்டின் விவாதப் பொருளாக, இந்த நூற்றாண்டின் பிரச்சனையாக இருக்கிறது. மக்கள் இப்போது பருவநிலை மாற்றம் பற்றி பேசுகிறார்கள். அதிலும் மாணவர்கள் அதிக அளவு பேசுகின்றனர். அவர்கள் பருவநிலை மாற்றம் என்பதை நிகழ்ந்துவிட்ட

ஒரு பேரழிவு என்பதாகப் பார்ப்பதில்லை. மாறாக, அதனை முதலாளித்துவத்துடன் மிக எளிதாகத் தொடர்பு படுத்திப்பார்க்கிறார்கள். எப்படிப்பட்ட சமத்துவமற்ற நிலை நிலவுகிறது, கேவலமான நுகர்வுவாதம் இருக்கிறது, அருவருப்பான செல்வச்செழிப்பும் ஆடம்பரமும் வெளிப்படுகிறது என்பதை பார்க்கிறார்கள். மேற்குலகைச் சார்ந்த நுகர்வுவாதம் கட்டமைக்கப்பட்டுள்ளதைப் பார்க்கிறார்கள். அவர்களின் இந்தப் பார்வை காந்திய வாதமாக அல்லது மார்க்சிய வாதமாகப் படலாம். ஆனால், இத்தனை ஆண்டுகளாக, முதலாளித்துவம் குறித்து நாங்கள் கட்டியமைத்த விமர்சனத்தைக் காட்டிலும், அவை கடுமையான விமர்சனங்களாக அமைகின்றன. எனவே, பருவநிலை மாற்ற நெருக்கடி அரசியல் நம்மை இடது திசையை நோக்கி இழுத்துச் செல்லப்போகிறது. இடது அரசியல் வளர்வதற்கான ஒரு புதிய அடித்தளத்தை ஏற்படுத்தித் தரப்போகிறது என்று நான் நினைக்கிறேன்.

**நீங்கள்; 'வாக்குச்சீட்டு முறையையே விரும்புவதாகச்' சொன்னீர்கள். வாக்குப் பெட்டி முறைக்குத் திரும்பிச் செல்வோம் என்றால் அரசியல் வன்முறை நிறைந்த தேர்தல் முறைக்கு; குறிப்பாக; பீகார் போன்ற மாநிலங்கள் திரும்பிச் செல்லாதா?**

இல்லை. தேர்தல் சாவடியைக் கைப்பற்றுவது என்றால் என்ன? நீங்கள் சொன்னது போல அது தேர்தல் சாவடியைக் கைப்பற்றுவது. வாக்குச் சீட்டைக் கைப்பற்றுவது அல்ல. தேர்தல் சாவடியில் மின்னணு வாக்கு யந்திரம் இருக்கிறது என்றால் ஒருவர் மின்னணு வாக்கு யந்திரத்தைக் கைப்பற்றிவிட முடியும். எட்டு தடவை பொத்தானை அழுத்தி அதனை வீடியோ எடுத்து சமூக ஊடகங்களில் போடுகிறார்கள் என்றால், தண்டனை கிடைக்கும் என்ற அச்சம் அவர்களுக்கு இல்லை என்று பொருள். கேள்வி கேட்க முடியாது; முழுமையான அதிகாரம் அவர்களின் கைகளில் இருக்கிறது என்று பொருள். ஒருவர் என்ன நினைக்கிறாரோ அதையெல்லாம் செய்யலாம் என்று பொருள். கேள்விக்கு இடமில்லாத அதிகாரம்தான் தேர்தல் சாவடியைக் கைப்பற்றுவதற்கு இட்டுச் செல்கிறது. கேள்வி கேட்க முடியாத அதிகாரம்தான், தேர்தல் வன்முறைக்கு இட்டுச் செல்கிறது.

துவக்கக் காலங்களில் பார்த்தீர்கள் என்றால், தேர்தல் போட்டியில் பங்கெடுத்தால் வன்முறை தாக்குதல் நடந்தது. அதற்கு முன்பு 'அமைதியான வன்முறை' இருந்தது. அப்போதெல்லாம் வன்முறை இருக்காது. அந்த சமயத்தில் 'அமைதியான முறையில் தேர்தல் சாவடியைக் கைப்பற்றுவது' நடந்தது. அந்த காலகட்டத்தில் அதுதான் 'ஒழுங்காக' இருந்தது. அந்த காலத்தில் அரசியல் விளையாட்டை அந்த முறையில்தான் விளையாட வேண்டியிருந்தது.

ஆனால், மக்கள் தேர்தலில் பங்கெடுக்கத் துவங்கியபோது, போராடத் துணிந்து போட்டி யிடும்போது, வன்முறைத் தாக்குதல் நடக்கிறது. அதனை தேர்தல் வன்முறை என்கிறோம். அதற்குப் பிறகு புதிய மட்டத்திலான சமநிலையை எட்டும்போது, எந்த ஒருவரும் வாக்களிக்கலாம் என்ற நிலை ஏற்படும்போது, எவரின் வாக்கையும் நீங்கள் கைப்பற்ற முடியாது. வாக்களிக்கக் கூடாது என்று எந்த ஒருவரையும் தடுத்து நிறுத்த முடியாது. அப்படியிருக்க, வாக்குப் பெட்டி முறை திரும்பி வருவது எப்படி கூடுதல் வன்முறைக்கு இட்டுச் செல்லும்? இன்னும் சொல்லப்போனால், மின்னணு தேர்தல் முறையில் கூடுதல் வன்முறைகள் சில மாநிலங்களில் நடக்கின்றன. சில மாநிலங்களில் குறைவான வன்முறைகள் நடக்கின்றன. எனவே, வாக்குப்பெட்டி தேர்தலா? அல்லது மின்னணு வாக்கு எந்திர தேர்தலா? என்பது பிரச்சனையில்லை என்றே எண்ணுகிறேன்.

**ஜுன் 4 தேர்தல் முடிவுகள் சாதகமான ஒன்று என்பதாகக் கருதி நீங்கள் ஆச்சரியப்பட்டீர்களா?**

ஆமாம். (தேர்தலின் போது) அனைத்து வகையான பாரபட்சங்களும் இருந்தன. நிர்வாகம் ஒரு சார்பானதாக இருந்தது. அப்படியிருந்தும் உத்தரப்பிரதேச தேர்தல் மிகவும் நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது. பீகாரின் தேர்தல் முடிவுகள் குறித்து எங்களுக்கு எந்த ஆச்சரியமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் எங்கள் பணிக்கு தேர்தலில் இன்னும் கூடுதல் பலன் கிடைக்கும் என்றே நினைத்திருந்தோம்.

இரண்டு மாநிலங்களின் முடிவுகள் எனக்கு ஆச்சரியமளித்தன. ஒன்று உத்தரப்பிரதேசம். மற்றது மேற்கு வங்கம். 2021 போலவே மாநிலத்தை பாஜக கைப்பற்றிவிடும் என்ற செய்தியை ஊதிப் பெரிதாக்கிப் பரப்பினார்கள். கட்சிக்கு வெளியே உள்ள எனது நண்பர்கள் அனைவரும் மேற்கு வங்கத்தில் பாஜக வுக்கு 25 தொகுதிகளுக்குக் குறையாத வெற்றி கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால், அங்கே பிஜேபிக்கு வெறும் 12 இடங்களே கிடைத்தன. இந்த இரண்டு மாநிலங்களும் இந்த தேர்தலில் இனிய அதிர்ச்சியை அளித்துள்ளன.

**நீங்கள் விரைவில் தேர்தலில் போட்டியிடுவீர்களா? அது சாத்தியமா?**

அந்தப் பாத்திரத்திற்கு நான் பொருத்தமான ஆள் இல்லை.

**இல்லை. நீங்கள் பொருத்தமானவர்தான் என்று நான் நினைக்கிறேன்.**

இல்லை, இல்லை. அதற்கான ஆள் நானில்லை. நான் மற்ற பல வேலைகளைச் செய்வது கட்சிக்குப் பலன் தருவதாக இருக்கும் என்று நினைக்கிறேன். எனவே, கட்சிதான் முடிவு செய்ய வேண்டும். இருந்தாலும், தேர்தலில் போட்டியிடுவது போன்ற வேலைகளைக் காட்டிலும் மற்ற வேலைகளை நான் சிறப்பாகச் செய்ய முடியும் என்று மக்கள் நினைக்கலாம். **–நிறைவுற்றது**

# சுற்றுச்சூழல்; காலநிலை நெருக்கடி ( பகுதி 6 )

*( 2023 பிப்ரவரி 16-20 வரை பாட்னாவில் நடைபெற்ற 11வது கட்சிக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் )*

*24.* சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான முன்முயற்சிகளுடன் தொழிற்சங்க இயக்கமும் நகர்ப்புரங்களில் ஒரு செயலூக்கமிக்க பங்காற்றிட வேண்டும். இது (தொழிற்சாலைகளில்) சிறந்த மாசுக்கட்டுப்பாட்டுக் கருவிகளை நிறுவுவதற்கான கோரிக்கைகள், ஆற்றலையும் நீரையும் வீணாகாமல் சேமிப்பதற்கான உள்கட்டமைப்பை அமைப்பதற்கான கோரிக்கைககள் போன்ற பலவற்றையும் உள்ளடக்கியிருக்கலாம். தொழிற்சாலைகள், சட்டங்களை மீறாமலும், கழிவுகளை வெளியேற்றுவதன் மூலம் காற்று, நீர், சுற்றுச்சூழலை மாசுபடுத்தாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. கழிவுநீர் வடிகால் அடைப்பு, இயற்கை நீர் சுழற்சியில் இடையூறு ஆகியவை முக்கியமாக மனைவணிகத் துறையின் நலன்களுக்காகச் செலுத்தப்படும் கட்டற்றுப் பெருகும் கான்கிரீட்மயமாக்கத்தால் ஏற்படுகிறது. நகர்ப்புர வெள்ளத்தின் தாக்கங்களை குடியிருப்போரின், குறிப்பாக குடிசைவாசிகளின் வாழ்க்கையில் பார்த்திருக்கிறோம். தொழிற்சாலைகளாலும், நகர்ப்புர மேட்டுக்குடியினராலும் ஏற்படுத்தப்பட்ட, நகர்ப்புரங்களில் காணக்கூடிய சுற்றுச்சூழல் சீர்கேடுகளால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் நகர்ப்புர ஏழைகளும், தொழிலாளர் வர்க்கமும்தான். தூய்மையான நகரத்திற்கான தங்களது உரிமையைக் கோர தொழிலாளர் வர்க்கத்தை அமைப்பாக்கி, சுற்றுச்சூழலுக்கு உகந்த கொள்கைகளை உருவாக்க, கொள்கை வகுப்பாளர்களைக் கட்டாயப்படுத்துவது ஒரு முக்கியமான பணியாகும்.

சுரண்டலுக்கு எதிரான இன்றைய போராட்டங்களில், சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் அழிவை தடுத்து நிறுத்தும் கருத்தை நாம் உள் கொண்டிருக்க வேண்டும். இடப்பெயர்வு, சுற்றுச்சூழல் சீரழிவுக்கு எதிரான இயக்கங்களில் நாம் ஈடுபடுவது மட்டுமல்லாமல், அதற்கு எதிராகப் போராடும் அனைத்து சக்திகளுடனும் பரந்த கூட்டணிகளை உருவாக்க வேண்டும். சுற்றுச்சூழல் ரீதியில் அழிவை ஏற்படுத்தக்கூடிய கொள்கைகளைப் பின்னுக்குத் தள்ளும் அளவுக்கு பரந்துபட்டதாக சமூக இயக்கங்களை வளர்த்தெடுக்கும் பார்வையுடன், சுற்றுப்புறச் சீர்கேடுகளுக்கு எதிராக செயல்படும் கூட்டு மேடைகளை உருவாக்குவது என்பது நமது செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

*25.* கரியமில வாயுக்களுக்கான புதைகுழிகளை உருவாக்குதல் அல்லது உயிரி எரிபொருள் உற்பத்தி என்ற பெயரில் உள்ளூர் காடுகளையும் விவசாய நிலங்களையும் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வராமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். பணக்கார நாடுகள் குப்பை கொட்டும் இடங்களாக தெற்குலக நாடுகள் மாற்றப்படுவதை அனுமதிக்கக்கூடாது. மேலும் தொழில்மயமான நாடுகளால் உருவாகும் காலநிலை மாற்ற தாக்கங்களைத் தணிக்க தெற்கு உலகத்தின் விலைமதிப்பற்ற இயற்கை வளங்கள் சூறையாடப்படுவதை அனுமதிக்கக்கூடாது.

காடுகளிலும் சூழலியல் தாக்கங்களுக்கு உள்ளாகும் பகுதிகளிலும் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்கும் வகையில், உள்ளூர் குடிகளால் வளர்த்தெடுக்கப்பட்ட, சுற்றுச் சூழல் ரீதியாக தாக்குப்பிடித்து நிற்கும் உள்ளூர் குடிகளது வாழ்க்கைமுறைகள், செயல்பாடுகளின் அடிப்படை முக்கியத்துவத்தையும் நாம் அங்கீகரிக்க வேண்டும்.

*26.* இயற்கை வளங்கள் மீதான பொதுமக்கள் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை நாம் மீண்டும் வலியுறுத்த வேண்டும். நாட்டில் உள்ள பல்வேறு அரசாங்கங்களும் -மாநில அரசாங்கங்களும் ஒன்றிய அரசாங்கமும்- இயற்கை வளங்களை தனியார்மயமாக்குவதில் ஒரேகுறியாக முரட்டுத்தனமாக ஈடுபட்டுள்ள இந்த நேரத்தில், அது போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் நாம் எதிர்க்க வேண்டிய தேவையுள்ளது. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முயற்சி, வளங்கள் மீதான ஜனநாயகக் கட்டுப்பாடும், முடிவெடுப்பதில் ஜனநாயகமும் என்ற பெரும் பிரச்சனையிலிருந்து துண்டித்து நிற்க முடியாது. இலாபவெறி, வளங்களை கொள்ளையடிக்கும் கார்ப்பரேட் ஆட்சியின் கீழ் காலநிலை நெருக்கடியைத் தணிக்க முடியாது. பருவநிலை நெருக்கடியைத் தீர்க்க பல முனைகளிலும் முயற்சிக்க வேண்டும். சர்வதேச அளவில், அதிக ஜனநாயகப் பேச்சு வார்த்தைகளுக்கும் புவிப்பரப்பிலுள்ள உழைக்கும் ஏழைகள், பழங்குடியின மக்களுடன் நீடித்த ஒருமைப்பாட்டிற்கும் நாம் அழுத்தம் கொடுக்க வேண்டும். தேசிய அளவில், இயற்கை வளங்கள் மீதான உள்ளூர் கட்டுப்பாட்டைப் பாதுகாப்பதற்கும், ஆற்றல் மேலாண்மை, திறன்வாய்ந்த தொழில்நுட்பத்தை ஊக்குவிப்பதற்கும் பரப்புரை இயக்கங்களை வலுப்படுத்த வேண்டும். அரசாங்கம் அனைத்து பங்குதாரர்களுடன், குறிப்பாக, பாதிக்கப்படக்கூடிய விளிம்புநிலை சமூகங்களை கலந்தாலோசிக்க வேண்டும்; உள்ளூர் மட்டத்தில் கிராம சபைகளுக்கு உச்சபட்ச முன்னுரிமைகளை வழங்கவும் வேண்டும்.

*27.* இத்தகைய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு பிரச்சனையை நிவர்த்தி செய்ய, நெருக்கடியின் வேர்களை ஆராய்வது முக்கியம். மார்க்ஸ்

மூலதனத்தில் எழுதினார்: “ஒரு முழு சமூகமோ, ஒரு தேசமோ அல்லது ஒரே சமயத்தில் இருக்கும் அனைத்து சமூகங்களுமோ கூட பூமியின் உரிமையாளர்கள் அல்ல. அவர்கள் வெறுமனே அதனைக் கையில் வைத்திருப்பவர்கள், அதன் பயனாளிகள், மேலும் அதனை இன்னும் மேம்பட்ட நிலையில், அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கையளிக்கும் கடப்பாடு கொண்டவர்கள்”.

மார்க்சும் எங்கெல்சும் உற்பத்தி முறை, குறிப்பாக முதலாளித்துவ உற்பத்தி முறை பற்றிய ஆய்வுக் கண்ணோட்டத்தில் சூழலியல் பிரச்சினையில் ஈடுபட்டனர். மூலப்பொருள், ஆற்றல், மண் வளம் போன்ற இயற்கை உற்பத்தி ஆதாரங்கள் மூலதனத்திற்கென்று இயற்கை அளித்த இலவச கொடைகள் என்றே முதலாளித்துவத்தின் கீழ் கருதப்படுகின்றன என மார்க்ஸ் விளக்கினார். இயற்கை விதிக்கும் எல்லைகள் என்பவை லாபத்திற்காக உடைத்தெறியப்பட வேண்டிய தடைகள் என்றே மூலதனம் கையாளுகிறது. இது அவர் குறிப்பிட்ட “சரிசெய்ய முடியாத வளர்சிதை மாற்ற பிளவை” உருவாக்குகிறது. எனவே, இலாப வெறிகொண்ட முதலாளித்துவ முறையைக் கடந்த ஒரு உற்பத்தி முறை என்பது, காலநிலை மாற்றத்தையும் சுற்றுச்சூழல் சீரழிவையும் எதிர்த்துப் போராடும் தொலைநோக்கு சிந்தனையின் பிரிக்கமுடியாத பகுதியாக இருக்க வேண்டும்.

28. காலநிலை மாற்ற பிரச்சினைக்கான எந்தவொரு எதிர்வினையும் சமூகப், பொருளாதார சமத்துவமின்மைக்கும் தீர்வுகாண்பதாக இருக்க வேண்டியது அவசியமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டம் என்பது கட்டமைப்பு ரீதியான போராட்டமாகும்; முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்தின் ஓர் இன்றியமையாத கூறாகும். காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முயற்சி, வளங்கள் மீதான ஜனநாயகக் கட்டுப்பாடும், முடிவெடுப்பதில் ஜனநாயகமும் என்ற பெரும் பிரச்சனையிலிருந்து துண்டித்து நிற்க முடியாது. இந்தியாவில் வாழும் நம்மைப் பொறுத்தவரை, காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டம் என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள், சமூக மாற்றத்திற்காக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டங்கள், குறிப்பாக சாதி, வர்க்க, பாலின அடிப்படையில் நிகழும் அநீதிக்கு எதிரான போராட்ட நிகழ்ச்சிநிரலோடு பிரிக்கமுடியாதவாறு இணைந்துள்ளது.

-நிறைவுற்றது

## பாலஸ்தீன மக்கள் மீது இனப் படுகொலையை இஸ்ரேல் அரசே உடனே நிறுத்து! இந்திய அரசே! இஸ்ரேலுக்கு ஆயுதம் வழங்காதே!

2023-ஆம் ஆண்டு அக்டோபர்-7ஆம் தேதி அப்பாவி பாலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் தொடங்கிய கொடூரத் தாக்குதல், 2024-ஆம் ஆண்டு அக்டோபர் 7-ஆம் தேதி வரை ஓர் ஆண்டாக நீடித்து வருகிறது. ‘ஹமாஸ் அமைப்பின் தீவிரவாதத்தை ஒடுக்குகிறோம்’ என்று கூறிக்கொண்டு தொடங்கப்பட்ட இந்தத் தாக்குதலால் இதுவரை அப்பாவி பாலஸ்தீனர்கள் 42,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 30,000-த்திற்கும் மேற்பட்டவர்கள் பெண்களும், குழந்தைகளும் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது. காசாவில் பள்ளிக்கூடங்கள், அலுவலகங்கள், மருத்துவமனைகள், விளையாட்டுத் திடல்கள், அகதிகள் முகாம்கள் மற்றும் ஐ.நா.நிவாரண முகாம்கள் உட்பட கூட்டம் கூட்டமாக மக்கள் இருக்கிற இடங்கள் மீது, குண்டு மழை பொழிந்து மனிதத் தன்மையற்ற படுகொலையை இஸ்ரேல் நடத்தி வருகிறது. அப்பாவி மக்களை மேற்கிலிருந்து ரப்பா வரை நகர்த்தி ஒரு “கான்சன்ட்ரேஷன் கேம்ப்” போல ஒரே இடத்தில் அகதிகளாக குவித்து வைத்துள்ளது. அவர்கள் தங்குமிடம், உணவு, உடை, மருத்துவம், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் ஏதுமின்றி தமது சொந்த நாட்டிலேயே அகதிகளாக உழல்கின்றனர்.

பாலஸ்தீன மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்படும் போரில், இஸ்ரேலுக்கு ஆதரவாக இருக்கும் அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகளைக் கண்டித்தும், இஸ்ரேல் அரசு மேற்கொண்டு வரும் இனப்படுகொலையை உடனடியாக நிறுத்த வேண்டுமெனக் கோரியும், நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அரசு மறைமுகமாக இஸ்ரேலுக்கு ஆயுத உதவி செய்வதைக் கண்டித்தும், அக்டோபர் 7ஆம் தேதியை பாலஸ்தீன ஒருமைப்பாட்டு, ஆதரவு நாளாக கடைப்பிடிக்க வேண்டுமென்று அகில இந்திய அளவில் சிபிஐ (எம்), சிபிஐ, சிபிஐ (எம்.எல்) லிபரேசன், பார்வர்ட் பிளாக் ஆகிய இடதுசாரிக் கட்சிகள் நான்கும் கூட்டாக முடிவெடுத்துள்ளன. அந்த அடிப்படையில் இந்தியா முழுவதும் அனைத்துப் பெரு நகரங்கள், மாவட்ட தலைநகரங்களில் இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி பெருந்திரள் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளன. 2024 அக்டோபர் 7 அன்று சிபிஎம், சிபிஐ, சிபிஐ (எம்எல்)உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள் சார்பில் தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில பெருந்திரள் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டு வெற்றி பெறச் செய்ய வேண்டும் என இகக(மாலெ) மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, இகக(மா) மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், இகக மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஆகியோர் கூட்டாக அழைப்பு விடுத்திருந்தனர்.

# முக்கியமானக் கனிமங்களும்; முக்கியமற்ற மக்களும்!

**சுப.உதயகுமார்**

“தாராளமயம், தனியார்மயம், உலக மயம்” எனும் முதலாளித்துவ மும்மையால் கடத்திச் செல்லப்பட்டிருக்கும் நம்முடைய உலகில் மனிதர்களும், பிற உயிரினங்களும், இயற்கையும் முக்கியமானவை அல்ல. அள்ளித்தோண்டி எடுத்து, அதிக விலைக்கு விற்று, அதானி - அம்பானி - அனில் - அகர்வால் போன்ற முதலாளிகளை மேலும் பணக்காரர்களாக்கும் கனிமங்கள்தான் இன்றைய உலகில் முக்கியமானவை.

நாடெங்கும் ஆங்காங்கேப் படிந்திருக்கும் முக்கியமானக் கனிமங்களைக் கண்டு பிடித்து, அகழ்ந்தெடுத்து, சந்தைப்படுத்துவது அரசின் தலையாயக் கடமைகளுள் ஒன்றாகிறது. இதனடிப்படையில் இந்திய அரசின் சுரங்க அமைச்சகம், “தேசிய முக்கியமானக் கனிமங்கள் இயக்கம்” *(National Critical Mineral Mission)* குறித்த அறிவிப்பை 2024-25 ஒன்றிய பட்ஜெட்டின் ஒரு பகுதியாக அறிவித்தது. இதன் நோக்கங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை சாத்தியமாக்குவதும், நிகரச் சுழியப் பொருளாதாரத்திற்கு *(net-zero economy)* மாறுவதும் ஆகும். இந்நடவடிக்கைகளுக்குத் தேவையான அத்தியாவசிய மூலப்பொருட்களில் இந்தியா தன்னிறைவு பெறுவதற்காகவே மேற்படி முயற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

முக்கியமானக் கனிமங்கள் இயக்கத்தின் நோக்கங்கள் மூன்று: முக்கியமானக் கனிமங்களின் உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவது, முக்கியமானக் கனிமங்களை மறுசுழற்சி செய்வது, மற்றும் முக்கியமானக் கனிமவளங்களை வெளிநாடுகளிலிருந்து கையகப்படுத்துவது.

முக்கியமானக் கனிமங்களின் நீண்ட பட்டியலில் கீழ்க்காணும் கனிமங்கள் இடம்பெறுகின்றன: லித்தியம் *(lithium)*, கிராபைட் *(graphite)*, தாமிரம் *(copper)*, கோபால்ட் *(cobalt)*, நிக்கல் *(nickel)*, காலியம் *(gallium)*, மாலிப்தினம் *(molybdenum)*, பிளாட்டினம் *(platinum)*, பாஸ்பரஸ் *(phosphorus)*, பொட்டாஷ் *(potash)*, சிலிக்கான் *(silicon)*, டின் *(tin)*, டைட்டானியம் *(titanium)*, டங்க்ஸ்டன் *(tungsten)*, வானாடியம் *(vanadium)* முதலானவை.

முக்கியமானக் கனிமங்களைக் கண்டுபிடித்து, அகழ்ந்தெடுத்து, பதனிட்டு, பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது அனைத்தும் முக்கியமானக் கனிமங்கள் இயக்கத்தின் *(Critical Mineral Mission)* நோக்கங்களாக இருக்கும். இதற்காக ஆழ்கடல் பகுதியில் சுரங்கத் தொகுதிகள் ஏலம் விடப்படும். வெளிநாடுகளிலிருந்து கனிமங்கள் பெறுவதற்காக கூட்டுமுயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தல் *(Mines and Minerals (Development and Regulation) Act of 1957)* எனும் சட்டம் கடந்த 2023-ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டது. இதன்படி லித்தியம் *(lithium)*, பெரிலியம் *(beryllium)*, நியோபியம் *(niobium)*, டைட்டானியம் *(titanium)*, டான்டலம் *(tantalum)*, மற்றும் சிர்கோனியம் *(zirconium)* எனும் ஆறு அணுக்கனிமங்களைக் கண்டுபிடிப்பதில் தனியார் நிறுவனங்களும் ஈடுபடலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. முக்கியமானக் கனிமங்களை அள்ளித்தோண்டி எடுப்பதிலும், தொழிற்நுட்பங்களைப் பயன்படுத்துவதிலும், வேவு பார்க்கும் நடவடிக்கைகளிலும் தனியார் நிறுவனங்கள் பணியாற்றும்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களிலும் கேரளாவின் கொல்லம், ஆலப்புழா மாவட்டங்களிலும் வி.வி.மினரல் போன்ற தனியார் நிறுவனங்களும், கேரளா மினரல்ஸ் மற்றும் மெட்டல்ஸ் நிறுவனமும் *(KMML)*, இந்திய அரியவகை மணல் நிறுவனமும் *(IRE)* கார்னெட், ரூட்டைல், சிர்கான், லூக்கொக்சின், சிலிமனைட், இல்மனைட், மோனோசைட் போன்ற கனிம வளங்களை அள்ளித்தோண்டி விற்று, கொள்ளை லாபம் அடைந்து வருகின்றன.

இம்முறைகேடுகள் குறித்தெல்லாம் பல்வேறு ஆய்வுகள், விசாரணைகள் நடத்தப்பட்டு, இறுதியில் மார்ச் 27, 2018 அன்று சென்னை உயர்நீதி மன்றம் தாதுமணல் அகழ்வை ஒன்றிய அரசு முறைப்படுத்த வேண்டும், மோனோசைட் கனிமம் அள்ளுவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டது. அதனைத் தொடர்ந்து

2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தாதுமணல் ஏற்றுமதி தடை செய்யப்பட்டது. பின்னர் 2019-ஆம் ஆண்டு பிப்ருவரி மாதம் மோடி அரசு தனியார் நிறுவனங்கள் தாதுமணல் அள்ளுவதை முற்றிலுமாகத் தடை செய்தது. ஆனால் கடந்த 2021-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் திடீர் பல்டி அடித்த மோடி அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொண்ட அத்தனை நடவடிக்கைகளையும் நீக்கிவிட்டு, தனியார் நிறுவனங்கள் தாதுமணல் அள்ளலாம் என்று அறிவித்தது. இந்திய கடற்கரைகளையும், அவற்றின் கனிம வளங்களையும் அதானி குழுமத்துக்கு தாரைவார்ப்பதற்காக விதிகள் மாற்றியமைக்கப்படுகின்றன என்று பலரும் சந்தேகிக்கின்றனர். அதற்கேற்ப உள்ளூர் தாதுமணற்கொள்ளை நிறுவனங்கள் அனைத்தும் ஏற்கனவே முடக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில் கடற்கரையோரக் கனிம வளத்தை வணிகரீதியில் பிரித்தெடுத்து சந்தைப்படுத்த தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கும், ஐ.ஆர்.இ. நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று தமிழ்நாடு முதலமைச்சர் முன்னிலையில் 9.1.2023 அன்று கையெழுத்திடப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் தென் பகுதியில் சுமார் 52 மில்லியன் டன் தேரிமணல் இருப்பதாகவும், இதனைக் கொண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் குதிரைமொழி மற்றும் சாத்தான்குளம் ஆகிய இடங்களில் கனிமங்களைப் பிரித்தெடுக்கும் இரண்டு தொழிற்சாலைகள் தலா ரூ.1,500 கோடி முதலீட்டில் நிறுவி, ஆண்டிற்கு ஒவ்வொரு தொழிற்சாலையிலிருந்தும் ரூ.1,075 கோடி வருவாய் ஈட்ட முடியும் என்றும், இதன்மூலம் இப்பகுதிகளில் சிறப்பான பொருளாதார வளர்ச்சி ஏற்படுமென்றும், நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு உண்டாகுமென்றும் அந்த ஒப்பந்தம் குறிப்பிடுகிறது. கடந்த 2007-ஆம் ஆண்டு டாடா நிறுவனம் சாத்தான்குளம் பகுதியில் 12,000 ஏக்கர் நிலத்தில் டைட்டானியம் டை ஆக்சைடு தொழிற்சாலை ஒன்றை நிறுவி தேரிமணலை முழுவதுமாகக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டதும், மக்களின் கடுமையான எதிர்ப்பால் அத்திட்டம் கைவிடப்பட்டதும் நினைவுகூரத் தக்கவை.

அண்மையில் இந்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் கடலிலிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு எடுப்பதற்கு ஹட்ரோகார்பன் அகழ்வு மற்றும் உரிமம் கொள்கையின்கீழ் (Hydrocarbon Exploration & Licensing Policy--HELP) விருப்ப மனுக்களைக் (Notice Inviting Offers--NIO) கோரியிருந்தது. ஒன்றிய எரிசக்தி இயக்குனரகம் (DGH) சார்பாக எண்ணெய் மற்றும் எரிவாயு எடுப்பதற்கான திறந்த வெளி அனுமதி (OALP) அடிப்படையில், 9-வது சுற்று ஏலம் அண்மையில் விடப்பட்டிருக்கிறது. இதில் நாடு முழுவதும் 28 பகுதிகளில் 1,36,596 சதுர கிலோமீட்டர் ஏலம் விடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கன்னயாகுமரிக்கு அருகே உள்ள ஆழ்கடலில் மூன்று தொகுதிகளும், சென்னைக்கு அருகே ஆழ்கடல் பகுதியில் ஒரு தொகுதியும் அமைந்துள்ளன:

1. CY - UDWHP-2022/1 - 9514.63 ச.கி (குமரி)

2. CY - UDWHP-2022/2 - 9844.72 ச.கி (குமரி)

3. CY - UDWHP-2022/3 - 7795.45 ச.கி (குமரி)

1.CY- UDWHP-2023/1 - 5330.49 ச.கி (சென்னை)

மொத்தம் 32,485.29 சதுர கிலோமீட்டர் பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு எடுப்பதற்கு ஏலம் விடப்பட்டது. கடந்த 03.01.2024 அன்று மேற்கண்ட இடங்களில் ஆய்வு மற்றும் உற்பத்திக் கிணறுகள் அமைக்க சர்வதேச அழைப்பாணை விடுக்கப்பட்டது. அந்தக் காலக்கெடு நீட்டிக்கப்பட்டு செப்டம்பர் 21 அன்று விண்ணப்பிக்கும் காலம் முடிவடைந்தது.

நான்கு ஆழ்கடல் தொகுதிகளையும் கபளீகரம் செய்ய ஓ.என்.ஜி.சி மற்றும் வேதாந்தா நிறுவனங்கள் முயற்சிக்கின்றன.

குமரி முனைத் தொகுதிகளின் நடுவே ஆழ்கடலில் "வாட்ஜ் பேங்க்" (Wadge Bank) எனும் "படுகைக் கரை" ஒன்று அமைந்திருக்கிறது. உலகம் முழுவதும் வெகுசில படுகைக் கரைகளே உள்ள நிலையில், அவற்றுள் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ளது. சற்றொப்ப 10,000 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட இந்தப் படுகைக் கரை இந்தியாவின் மாபெரும் மீன்வளச் சுரங்கமாகத் திகழ்ந்து வருகிறது.

இங்கே பலமான நீரோட்டங்களோ, அலைகளோ, வெள்ளப்பெருக்கோ ஏற்படுவதில்லை என்பதால், மீன்களுக்குத் தேவையான உணவுகள் உற்பத்தி ஆகின்றன. ஏராளமான பவளப் பாறைகள் படிந்திருக்கும் இப்பகுதியில் இருநூறுக்கும் மேற்பட்ட மீன் வகைகளும், அறுபதுக்கும் மேலான கடல்வாழ் உயிரினங்களும் வாழ்கின்றன. மீன்களும், பிற கடல்வாழ் உயிரினங்களும் இனப்பெருக்கம் செய்யும் தலமாகவும் இது விளங்குகிறது.

தென் மாநிலங்களைச் சார்ந்த லட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரமாகவும், கோடிக்கணக்கான மக்களின் உணவுப் பெட்டகமாகவும் இந்தப் பகுதி அமைந்திருக்கிறது. இங்கே எண்ணெய் மற்றும் எரிவாயு எடுப்பது மேற்படிச் சூழலை முற்றிலுமாக அழித்தொழித்து, மீனவக் குடும்பங்களை



**ஆபத்தான அணு மணல் ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டக்களத்தில் குமரி மாவட்ட மக்கள்**

ஏழ்மைக்குள்ளும், வறுமைக்குள்ளும் தள்ளி விடும். அதேபோல, எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைச் செயல்பாடுகளும், அதனால் ஏற்படும் மாசுபாடும், கடல் சூழலை முற்றிலுமாக அழித்துவிடும். பெரும்பாலான இந்திய மக்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு தகர்த்தெறியப்படும்.

கனிம அகழ்வுக்கும், மேற்கத்திய வளர்ச்சி சித்தாந்தத்துக்கும், கார்ப்பரேட்டுகளின் லாபத்துக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் இந்திய மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அரசுகளும், பெருமுதலாளிகளும் கள்ள உறவு பூண்டு ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ள, இதனைத் தட்டிக்கேட்கும் மக்கள் இந்தியாவின் வளர்ச்சிக்கு எதிரான வர்களாக, தேசத்துரோகிகளாக, அந்நிய நாட்டு கைக்கூலிகளாக, நக்சல்களாக, மாவோயிஸ்டு களாகப் பார்க்கப்படுகின்றனர்.

இந்த மண்மீது நாம் வாழ்வதற்குத் தேவையான அனைத்து வளங்களையும் நாம் இந்த மண்ணிலிருந்துதான் எடுத்தாக வேண்டும். ஆனால் பொன் முட்டையிடும் வாத்தின் முட்டைகளை ஒவ்வொன்றாக எடுத்து அனைவருமாக உயர்வதா, அல்லது கார்ப்பரேட் முதலாளிகளின், ஆளும் வர்க்கத்தின் பேராசையால் வாத்தை அறுத்து அனைத்தையும் இழப்பதா?

வளர்ச்சிக் கொள்கைகளில், திட்டங்களில் பொறுப்பான செயல்பாடுகள் வேண்டும். கனிமங்கள் அகழ்வதில் நீடித்த நிலைத்தத் தன்மை (sustainability) வேண்டும். கனிமங்களின் அகழ்வால், பதனிடும் பணிகளால், பயன்பாட்டால் எழும் சுற்றுச்சூழல் தாக்கங்கள், சமூகத் தாக்கங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அனைத்திற்கும் மேலாக, கனிமவள அகழ்வுத் திட்டங்களால் பாதிப்புக்குள்ளாகும் மக்கள் மறுத்தால், அத்திட்டங்கள் முற்றிலுமாக கைவிடப்பட வேண்டும்.

# வீடு; வீட்டுமனை பட்டா கேட்டு ஆர்ப்பாட்டம்

*30.09.2024 இன்று காலை செங்கற்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரியிலுள்ள வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வீடு, வீட்டுமனை பட்டா கேட்டு இகக(மாலெ) சார்பாக கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் கூடுவாஞ்சேரி நகரச் செயலாளர் மு.திணேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் இகக(மாலெ) மாவட்ட செயலாளர் சொ.இரணியப்பன், ஒன்றியச் செயலாளர் எம்.பாலாஜி, ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர்கள் உ.அதியமான், ஜி.சிவா, அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாநிலக்குழு உறுப்பினர் கிருஷ்ணவேணி, புஇக மாவட்டத் தலைவர் சி.இராஜேஸ்குமார், வண்டலூர் கிராம சிறு விவவசாயிகள் சங்கத் தலைவர் வ.கோ. இரணியப்பன் ஆகியோர் பங்கேற்று கண்டன உறையாற்றினர் பின்னர் வட்டாட்சியரைச் சந்தித்து ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கும் சர்வே என் 114.ல் நிலமோசடி கும்பல் பதிவு செய்துள்ள ஆவணத்தை இரத்து செய்யக் கோரியும் ஆதிதிராவிட மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட பஞ்சமி நிலத்தை (கிரசண்ட் பொறியியல் கல்லூரி இருக்கும் இடம்) மீட்டுத் தர கோரியும் சர்வே என் 131ல் வண்டலூரில் மூன்று தலைமுறையாக குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க கோரியும் மனு கொடுக்கப்பட்டது. அதேபோல், 01.10.2024 அன்று பெருங்களத்தூர் குண்டுமேடு மற்றும் அகரம் தென் ஊராட்சி வெங்கம்பாக்கம் கிராம மக்களுக்கு வீட்டுமனை பட்டா, வீட்டுமனை,வீடு வழங்கிடக் கேட்டு செங்கற்பட்டு மாவட்டம் தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. பின்னர் வட்டாட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. வட்டாட்சியர் மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரை செய்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார். ஆர்ப்பாட்டத்திற்கு இகக(மாலெ) தாம்பரம் நகரச் செயலாளர் அ.ஆபிரகாம் தலைமை தாங்கினார். குண்டுமேடு பகுதி குடியிருப்போர் சங்கத் தலைவர் தீன்பாய், வெங்கம்பாக்கம் இகக(மாலெ) கிளைச் செயலாளர் கருத்துபாண்டி மற்றும் தலைவர்கள் கலந்து கொண்டு கண்டன உறையாற்றினர்.*

# தமிழகத் தொழிலாளர் நியாயமான போராட்டங்களுக்கு செவி மடுக்க மறுத்துவரும் திமுக அரசு!

சென்னை அருகே சுங்குவார்சத்திரத்தில் உள்ள, தென்கொரிய பன்னாட்டு நிறுவனமான சாம்சங் தொழிலாளர்களின் போராட்டமானது நாடு கடந்து உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. மொத்தமுள்ள 5000 தொழிலாளர்களில் சுமார் 1700 பேர் மட்டுமே நிரந்தரத் தொழிலாளர்கள். ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின், தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்ற நுகர்வுப் பொருட்கள் தயாரித்து வழங்கும் இந்நிறுவனம் முழுக்க முழுக்க இளம் தொழிலாளர்களைக் கொண்டு 16 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இந்த நிறுவனத்தில் இப்போதுதான் முதல் முறையாக தொழிற்சங்கம் துவங்கப்பட்டிருக்கிறது. குறைவான கூலி, படுமோசமான ஓய்வற்ற பணி நிலைமைகள் ஆகியவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வேறு வழியின்றி சாம்சங் தொழிலாளர்கள் சங்கமாக அணி திரண்டனர். சாம்சங் போன்ற நிறுவனத்தின் அடாவடியை எதிர்கொள்ள வெளித் தலைமை தேவை என்பதை நன்கு உணர்ந்திருந்த தொழிலாளர்கள் தங்கள் சங்கத்தை சிஐடியு மையச் சங்கத்துடன் இணைத்துக் கொண்டனர்.

சங்கத்தைப் பதிவு செய்ய தொழிற்சங்கப் பதிவாளருக்கு அனைத்து ஆவணங்களுடனும் படிவம் சமர்ப்பித்தனர். தொழிற்சங்க சட்டப் படி பதிவு செய்ய வேண்டிய பதிவாளர் எவ்விதக் காரணமும் சொல்லாமல் காலம் தாழ்த்தி வந்தது சாம்சங் நிர்வாகமோ 90%க்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கத்தை அங்கீகரிக்க மறுத்துவிட்டது. மாறாக, சிஐடியு போன்ற மைய சங்கத்தை, வெளித் தலைமையை ஏற்க முடியாது என்றும் வேண்டுமானால் தொழிலாளர் தரப்பிலிருந்து தொழிலாளர் பிரதிநிதிகளுடன் பேச தயாராக இருப்பதாகவும் சொல்லி வருகிறது. இது அப்பட்டமான தொழிலாளர் உரிமைகளை,தொழிற்சங்க உரிமைகளை, கூட்டுப் பேர உரிமைகளை மறுக்கின்ற சட்டவிரோதச் செயலாகும். தொழிற்சங்க அங்கீகாரம்,பணி நிலைமைகளில் முன்னேற்றம், ஊதிய உயர்வு என்ற நியாயமான கோரிக்கைகளை தொழிலாளர்கள் முன்வைத்துள்ளனர். சமரச பேச்சுவார்த்தைக்கான எல்லா கதவுகளும் அடைக்கப்பட்ட நிலையில் தொழிலாளர்கள் கடந்த செப்டம்பர் 9 முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழக அரசின் தொழிலாளர் துறை பாராமுகமாக இருக்கும் போது, தமிழக காவல்துறையோ போராட்டத்தை ஒடுக்குகிற வேலையைச் செய்து வருகிறது.

தமிழக அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுப்பதற்காக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் நோக்கி பேரணி நடத்திட தொழிற்சங்கம் திட்டமிட்டிருந்தது. பேரணிக்கு அனுமதி இல்லை என்று கூறி சாம்சங் ஊழியர்கள் சங்கத் தலைவரும் சிஐடியு மாநிலச் செயலாளருமான தோழர் முத்துக்குமார் தலைமையிலான சுமார் 100 தொழிலாளர்களை காவல்துறை கைது செய்ததோடு தோழர் முத்துக்குமார் உட்பட சில முன்னணிகளை சிறையிலடைத்தது. சாம்சங் பன்னாட்டு நிறுவனத்திற்காக நாட்டின் அரசியலமைப்புச் சட்ட உரிமைகள், ஜனநாயக உரிமைகள் ஆகியவற்றை தமிழக முதல்வர் கையிலுள்ள காவல்துறை காலில் போட்டு மிதிக்கிறது.

காவல்துறையின் ஜனநாயக விரோதச் செயலைக் கண்டித்து ஏஐசிசிடியு உள்ளிட்ட மைய சங்கங்கள் கூட்டாக அறிக்கை விட்டன. சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திட முடிவு செய்திருந்தன. செப்டம்பர் 18 அன்று மைய தொழிற்சங்கத் தலைவர்கள் ஆர்ப்பாட்ட இடத்தில் கூடுவதற்கு முன்பாகவே அவசரமாக சிஐடியு மாநிலத் தலைவர் தோழர் அ.சௌந்தர்ராஜன் உள்ளிட்ட மைய சங்க மாநில நிர்வாகிகளை காவல்துறை கைது செய்து தனது பன்னாட்டு நிறுவன விசுவாசத்தை காட்டிக் கொண்டது.

மாநிலம் முழுவதும் சாம்சங் தொழிலாளர்களுக்கு ஆதரவாக தமிழக முதல்வர் தலையிட வேண்டும் எனக் கோரி தொழிற்சங்கங்கள் குரல் எழுப்பிய போதும் தமிழக முதல்வர் அமைதி காத்து வருவது கண்டனத்திற்குரியது.

அந்நிய முதலீடுகளுக்காக சிவப்புக் கம்பளம் விரிக்கும் தமிழக முதல்வர் தமிழக தொழிலாளர்களின் உரிமைகளை அதன் அடியில் போட்டு நசுக்கி விடக்கூடாது. நாட்டின் சட்ட திட்டங்களுக்கு, நம் நாடு ஏற்றுக்கொண்ட ஐஎல்ஓ பிரகடனங்களுக்கு சாம்சங் நிறுவனம் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். தமிழக முதல்வர் அதை உறுதி செய்ய வேண்டும்.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டம்.

ஒவ்வொரு முறையும் உரிய காலத்தில் போக்குவரத்துத் தொழிலாளர்களால் ஊதிய உயர்வு பெற முடிவதில்லை. பேச்சுவார்த்தை நடத்தி ஊதிய உயர்வு ஒப்பந்தம் எட்டப்படும் போது நடப்பு ஊதிய உயர்வு காலமே

முடிந்து விடுகிறது. அது போல் அல்லாமல், இம்முறையாவது விரைவாக பேசி ஒப்பந்தம் முடிக்கப்பட வேண்டும் என்பது போக்குவரத்துத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

போனஸ் சட்டம் அதிகபட்ச போனசுக்கு உச்ச சவரம்பு விதித்துள்ள போது, தீபாவளிக்கு 25% போனஸ் என்பது போக்குவரத்துத் தொழிலாளர்களின் நியாயமான எதிர்பார்ப்பு. தமிழக அரசு போக்குவரத்து போன்ற சேவைத் துறையில் லாப-நஷ்ட கணக்கு பார்க்காமல், மகளிர் இலவச பயணம் உட்பட பல்வேறு கட்டண சலுகைகளை ஈடு செய்து தொழிலாளர்களின் போனஸ் மற்றும் ஊதிய உயர்வு கோரிக்கைகளை நிறைவேற்றி உடன்பாடு காண வேண்டும்.

போக்குவரத்துத் துறையில் ஓய்வூதிய தாரர்களுக்கு ஓய்வு பெறும் போது ஓய்வு காலப் பயன்கள் வழங்கப்படுவதில்லை.கிட்டத்தட்ட கடந்த 60 மாத காலமாக ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதிய பஞ்சப்படி உயர்த்தி வழங்கப்படாமல் உள்ளது. அவர்களின் மருத்துவ காப்பீடு கோரிக்கையும் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. இந்த சமூகம் இயங்க கடும் வெயிலிலும் மழையிலும் பணியாற்றிய போக்குவரத்து ஓய்வூதியதாரர்களின் பண பயன்கள் தொடர்பாக தமிழக அரசு நீதிமன்றம் செல்வதையும் தீர்ப்பு தொழிலாளர்களுக்கு சாதமாக வந்தபோதிலும் மேல்முறையீட்டுக்கு செல்வதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ளது. நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்குப் பிறகும் கூட தீர்ப்புகளை அமல்படுத்தாமல் காலம் கடத்துவது பெரும் அநீதியாகும்.

உள்ளாட்சித் துறை தூய்மை பணியாளர்கள் போராட்டங்கள்.

தமிழ்நாடு முழுவதும் உள்ளாட்சித் துறையில் தூய்மை பணியாளர்கள் தனியார்மயமாக்கத்திற்கு, அவுட்சோர்சிங்குக்கு, காண்ட்ராக்ட் கொள்ளைக்கு எதிராகவும் அரசு அறிவித்த அரசாணை எண்: 62 படி குறைந்தபட்ச ஊதியம் வழங்கிடக் கோரியும்,பாதுகாப்பான பணி நிலைமைகள், குடியிருப்பு வசதி, கொரோனா கால உதவித் தொகை ரூ. 15,000 ஆகிய கோரிக்கைகள் மீது தொடர் இயக்கம் நடத்தி வருகிறார்கள். ஆனால், தமிழக உள்ளாட்சித் துறையானது அடுக்கிய மூட்டையில் அடி மூட்டையாய் இருக்கும் தூய்மைப் பணியாளர்களின் நலன் காக்க செவி மடுக்க மறுக்கிறது. தூய்மைப் பணியாளர் விசயத்திலும் அரசு, தான் அறிவித்த குறைந்தபட்சக் கூலி அரசாணைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவது என்ற அவலமான நிலை நிலவுகிறது. தூய்மைப் பணியாளர்களை அமைப்பாக்கும் முன்னணி தொழிலாளர்கள் பழிவாங்கப்படுவதும் நடந்து வருகிறது. தூய்மை பணியாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு ஆவேசத்திற்கு தமிழக அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டமைப்புடன் கல்வி அமைச்சர் பேச்சு வார்த்தை.

தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு-டிட்டோ ஜாக், பழைய பென்ஷன் திட்டம், சம வேலைக்கு சம ஊதியம், ஊதிய முரண்பாடுகளை களைதல், பதவி உயர்வின் போது ஊராட்சி ஒன்றிய மட்ட இடம் மாறுதல் என்பதற்குப் பதிலாக மாநில அளவில் இடமாற்றம் போன்ற ஆசிரியர் விரோத அரசாணைகளை திரும்பப் பெறுதல், எமிஸ் செயலி இயக்கத்திலிருந்து ஆசிரியர்களை விடுவிப்பு செய்தல் உள்ளிட்ட 31 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்திட்டத்தில் உறுதியாக, கட்டுக்கோப்பாக, நன்கு அமைப்பாக்கப்பட்ட விதத்தில் இருந்த காரணத்தினால் வேறு வழியின்றி மாநில கல்வித்துறை அமைச்சர் நடத்திய பேச்சு வார்த்தையில் தற்காலிக உடன்பாடு ஏற்பட்டுள்ளது. ஆசிரியர்களின் சட்டமன்ற முற்றுகைப் போராட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அதுபோல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சுமை தூக்குவோர், டாஸ்மாக் விற்பனையாளர்கள் கோரிக்கைகளும் நீரு பூத்த நெருப்பாக உள்ளது.

திமுக அரசு விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

தமிழகத்தில் நடைபெற்று வரும் தொழி லாளர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்ட எச்சரிக்கையை தமிழக அரசு காணத் தவறினால் அதன் விளைவுகள் கடுமையானதாக இருக்கும். தமிழக அரசு தனது தேர்தல் வாக்குறுதி கடப்பாட்டிலிருந்து வழி தவறக்கூடாது. மதவெறி எதிர்ப்பு, கூட்டாட்சி, பன்மைத்துவ இந்தியாவுக்காக நிற்கிற தமிழக அரசு, கார்ப்பரேட் நலனிலிருந்து நவ தாராளவாத கொள்கைகளை அமுல்படுத்துவது சமூக நீதி, சமத்துவத்திற்கு எதிரானது என்பதையும் இந்தக் கொள்கைகளை அமுல்படுத்தியதால் மேற்குவங்கம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் மீண்டு வர முடியாமல் ஏற்பட்டுள்ள பின் விளைவுகளையும் தமிழக அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளத் தவறக் கூடாது.

ஒன்றுபட்ட நன்கு கட்டமைக்கப்பட்ட அமைப்பு செயல்பாடும் போர்க்குணமிக்க போராட்டங்களும் தொழிலாளர் வர்க்க வெற்றிக்கு இன்றியமையாததாகும்.

**– தேசிகன்**

# பிரதமர்– இந்திய தலைமை நீதிபதி இடையேயான நட்புறவு:
## இந்தியக் குடியரசின் எதிர்காலத்திற்கான அபாய அறிகுறி

இந்தியாவின் பல புதிய வழக்கங்களில், அமைப்பாக்கபட்ட விளம்பரத்திற்காக நடத்தப்பட்ட அந்தரங்க மத நிகழ்ச்சியில் பங்கேற்க, தலைமை நீதிபதியை அவரது இல்லத்தில் பிரதமர் சந்திப்பதும் கூட தற்போது வழக்கமாகி விட்டது. விநாயகர் சதுர்த்தி நிகழ்வின்போது பிரதமர் மோடி மஹாராஷ்டிர தொப்பியை அணிந்து கொண்டு இந்தியத் தலைமை நீதிபதி சந்திரசூட் வீட்டில் விநாயகருக்கு வழிபாடு செய்தது தற்போது சர்வதேச செய்தியாகி உள்ளது.

பிரதமர் இந்த ஒரே கல்லில் பல மாங்காய்களை நிச்சயமாக வீழ்த்தி விட்டார். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ள மதச்சார்பின்மை என்ற சொல் முழுவதும் சிதைக்கப்பட்டுவிட்டது என இந்த உலகுக்கு தெரியப்படுத்த, புதிய நாடாளுமன்றக் கட்டிடத் திறப்புவிழாவில் நடத்தப்பட்ட செங்கோல் சடங்கு முதல், அயோத்தியில் புதிதாகக் கட்டப்பட்ட, ராமர் கோயிலின் முழுவதும் அரசியலாக்கப்பட்ட ‘குடமுழுக்கு’ வரை கிடைக்கும் எந்த வாய்ப்பையும் அவர் ஒருபோதும் தவறவிடுவதில்லை. பெரும்பான்மை சமூகத்தினரின் மதப்பிரிவு, மதச்சார்பற்ற இந்திய அரசு எனப்படுவதன் உண்மையான மதமாக தற்போது ஆகிவிட்டது. இந்தத் தொடர் வரிசையின் அண்மைய வெளிப்பாடு தான் தலைமை நீதிபதி வீட்டில் நிகழ்த்தப்பட்ட விநாயகர் சதுர்த்தி ஒளி ப்பட (போட்டோ) நடவடிக்கையாகும்.

இந்த ஒட்டுமொத்த நிகழ்விலும் தவறாகக் கருதமுடியாத மகாராஷ்டிரா கோணமும் உள்ளது. விநாயகர் சதுர்த்தி இந்தியாவின் பல மாநிலங்களிலும் அதிகரித்த அளவில் கடைப்பிடிக்கக் கூடியதாக இருப்பினும் இது மகாராஷ்டிராவிற்கே உரித்தான விழாவாகும். அவருடைய குறிவைக்கப்பட்ட முதன்மையான பார்வையாளர்களாக மகாராஷ்டிரர்களையே அவர் மனதில் நினைத்துக் கொண்டிருந்தார் என்ற உண்மையை மறைக்க நரேந்திர மோடி எவ்வித முயற்சியையும் செய்யவில்லை. அவருடைய எக்ஸ் பக்கத்தில் ஆங்கிலத்துடன் கூட, மராட்டியிலும் இந்த செய்தியை அவர் பதிவு செய்திருந்தார். மோடியின் ஒவ்வொரு பிற ஒளிப்பட நடவடிக்கையையும் போல இந்த நடவடிக்கையும் தேர்தல் கணக்கீடுகளால்தான் இயக்கப்பட்டுள்ளது என்பதை சொல்ல வேண்டிய தேவையுமில்லை. மகாராஷ்டிர சட்டமன்றத் தேர்தல்களுக்கு இன்னும் சில வாரங்களே உள்ளது.

நீதித்துறையின் முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் தனக்கு இருக்கிறது என்ற செய்தியையும் கூட மோடி இதன் மூலம் சொல்லியுள்ளார். நிர்வாகத்துறை, சட்டமியற்றும் துறை, நீதித்துறை ஆகியவற்றுக்கிடையில் அதிகாரத்தை பிரித்து வைப்பது என்ற கருத்தாக்கம், நீதித்துறையின் சுதந்திரம் குறித்த கோட்பாடு, நீதிபதிகள் அரசியலில் இருந்து விலகி இருக்க வேண்டும், ஆட்சியாளர்களிடம் இருந்து ஆரோக்கியமான இடைவெளியைப் பராமரிக்க வேண்டும் என்ற வழக்கம், இவையனைத்தும் குப்பை தொட்டியில் வீசப்பட்டாகிவிட்டது. அழைக்கப்படாமலே ஒரு பார்வையாளராக பிளம் கலந்து கொண்டாரா அல்லது சிஜேஐ மூலம் அழைக்கப்பட்டிருந்தாரா என்பது குறித்து அநேகமாக நமக்கு ஒருபோதும் தெரியாமல் போகலாம். இருந்தபோதிலும் பரவலாக அறியப்பட்ட அந்த ஒளிப்படமும் காணொளியும் தாக்குதல்தன்மை வாய்ந்த ஆட்சியாளர்களின் முன்னே நீதித்துறை பின்வாங்கி சென்று விட்டது என்பதற்கான வரலாற்றுச் சான்றாக என்றும் நிலைத்திருக்கும்.

மோடியின் கணக்கீடுகள் எளிதாக புரிந்து கொள்ளதக்கதாக இருக்கிறபோது, சிஜேஐ-யின் நெருக்கடி புரிந்துகொள்ள கடினமான ஒன்றாகும். ஜனநாயகத்தின் பிற தூண்களை கீழ்நிலைப்படுத்துவதன் மூலம் அதிக அதிகாரங்களை கைப்பற்றிக் கொள்ளும் ஆட்சியாளர்களின் தாக்குதல்தன்மைக்கு நீதித்துறை உடந்தையாகிவிட்டது என்ற விமர்சனம் வைக்கப்பட்டுள்ளது. அதற்கு மாறாக, மதிப்பீடு செய்வதில் சிஜேஐ தவறிழைத்து விட்டார் என்ற அவருக்கு ஆதரவான கோணம் முதல் இந்த வழக்கத்திற்கு மாறான பிளம், சிஜேஐ பிணைப்பை புரிந்துகொள்ள முயற்சிப்பதற்கு விமர்சகர்கள் வேறு பல விளக்கங்களையும் வழங்குகிறார்கள்.

ஒவ்வொரு தனித்த நிகழ்வு குறித்தும் முழுமையான விளக்கங்கள் நம்மிடம் இல்லாத போதிலும் நீதித்துறையும் தற்போதைய அரசியல் நிறுவனமும் சந்திக்கும் புள்ளியை சுற்றியுள்ள சூழல் கவனிக்கத் தவற முடியாதளவு மிகவும் முக்கியமானதாகும். பொதுமக்களின் நினைவுகளில் ரஞ்சன் கோகாய் அத்தியாயம் இன்னும் கூட நீங்காமல் உள்ளது. கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி அபிஜித் கங்குலி பாஜகவில் சேருவதற்காக முன்னதாகவே ஓய்வு பெற்று, ஏற்கனவே மேற்கு வங்கத்திலிருந்து பாஜக எம்பியாகி விட்டது அண்மைய நிகழ்வாகும். கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் பல்வேறு பிற நீதிபதிகளும் பதவி ஓய்வுக்கு பிறகு தங்களது ஆர்எஸ்எஸ் தொடர்பை அறிவித்துள்ளனர். நீதித்துறையில் ஆர்எஸ்எஸ் இன் இந்த ஊடுருவலும் அதன் விளைவாக சங்கிப் படையணியின் பாசிசத் தாக்குதலை நோக்கி வளர்ந்துவரும் நீதித்துறையின் மென்மையான போக்கு அல்லது பாசிசத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குவதும் கூட நமது காலத்தின் அதிர்ச்சிக்குரிய எதார்த்தமாகும்.

அன்றொரு நாள் நீதித்துறையில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து விஹெச்பியின் ஒருநாள் கருத்தாடல் (brainstorming) அமர்வில் இரண்டு ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதிகள் உள்ளிட்ட கிட்டத்தட்ட 30

முன்னாள் நீதிபதிகள் கலந்து கொண்டனர். ஒன்றிய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் கூட இந்த அமர்வில் உரையாற்றினார். அது குறித்து தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் அவர் பதிவும் செய்திருந்தார். விசித்திரமாக இந்த மூடிய கதவுக்குள் நடைபெற்ற அந்தரங்க நிகழ்வில் கலந்துகொண்ட பங்கேற்பாளர்களின் அடையாளங்களை வெளிப்படுத்திய இந்தப் பதிவை பொதுவெளியில் பகிர்ந்து கொண்டது தவறென விஹெச்பியின் தலைவர் அலோக் குமார் தற்போது கூறுகிறார். குமார் கூறியதன் அடிப்படையில் வக்ஃபு வாரிய திருத்த மசோதா, கோயில்களை கையகப்படுத்துவது, மதமாற்றம், இன்ன பிற, உள்ளிட்ட சங்கிக் குடும்ப நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சங்களை உள்ளடக்கியவை இந்த அமர்வில் விவாதிக்கப்பட்ட தலைப்புகளாகும்.

குற்றவியல் சட்டங்களிலும் நடைமுறைகளிலும் பெரும் மாற்றங்களை மோடி அரசாங்கம் ஏற்கனவே செய்துள்ளது. மேலும் தேர்தல் பத்திரங்களின் விஷயத்தில் உச்ச நீதிமன்றம் இறுதியில் செய்தது போல, நிர்வாகத்துறையின் ஆணைகளைத் தலைகீழாக மாற்றியமைக்கவோ அல்லது தடுக்கவோ வேண்டிய பல்வேறு முக்கிய பிரச்சனைகள் நீதித்துறையின் முன்னால் உள்ளன.

இந்தப் பின்னணியில் தான் பிஎம்-சிஜேஐ நல்லிணக்கம் பார்க்கப்பட வேண்டும். பிணையே விதியாகும்; சிறை விதிவிலக்காகும், என்ற கோட்பாட்டை சிஜேஐ சந்திரசூட் மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறார். மேல் நீதிமன்றங்களால் பிணைகளுக்குத் தடை வழங்கப்படும் என்ற அச்சத்தின் காரணமாக பிணை வழங்க மறுப்பதற்காக கீழமை நீதிமன்றங்களை அவர் கண்டிக்கவும் செய்கிறார். ஆனால் உமர் காலித்தின் விசயத்தில் உமரின் பிணை மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தால் பதினான்கு முறை ஒத்திவைக்கப்பட்டுள்ளதை நாம் பார்த்துள்ளோம். மனுதாரர் தனது பிணை மனுவை திரும்பப் பெற்றுக் கொண்டு உயர்நீதிமன்றத்திற்கு திரும்பும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளார். எந்த நீதிமன்றத்தைக் கண்டு உச்ச நீதிமன்றம் அஞ்சுகிறது? அச்சத்தின் குடியரசாக இந்தியாவை மாற்றுவதற்கு முயற்சிக்கும் ஆட்சியாளர்கள் தங்களது புல்டோசர் மாதிரி ஆட்சி நிர்வாகத்துடன் வெறியாட்டம் போடுகின்றனர். இவ்வேளையில் ஆட்சியாளர்களின் தலைவருக்கும் நீதித்துறையின் தலைவருக்கும் இடையேயான இந்த நல்லிணக்கம், இந்தியக் குடியரசின் எதிர்காலத்திற்கான எச்சரிக்கை குறியாக மட்டுமே பார்க்கப்பட முடியும்.

# பகத்சிங் பிறந்தநாள் : கார்ப்பரேட் எதிர்ப்பு நாள்– எஸ்கேஎம் கண்டன ஆர்ப்பாட்டம் !



பகத்சிங் பிறந்த இந்நாளில், இந்திய விவசாயத்தை கார்ப்பரேட்கள் கொள்ளையடிக்க உருவாக்கப்பட்ட மோடி அரசின் மூன்று வேளாண் சட்டங்களை தோற்கடித்த வரலாற்று சிறப்புமிக்க தில்லி விவசாயிகள் போராட்ட மரபை உயர்த்திப் பிடிப்போம்!ஆட்சியாளர்கள் ஆதரவுடன் கட்டமைக்கப்படும் கார்ப்பரேட் பெருங் கொள்ளைகளுக்கு எதிராக விவசாயிகள், தொழிலாளர்கள் என அனைத்துப்பகுதி மக்களும் ஓரணியில் அணிதிரள்வோம்! என சூளுரைத்து...28.09.2024 அன்று சேலம் மாவட்டம் மல்லூர் பஸ் நிறுத்தம் அருகில் எஸ்கேஎம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.ராமமூர்த்தி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எஸ்கேஎம் செயற்பாட்டு குழு உறுப்பினரும் ஏஐகேஎம் மாநில பொதுச் செயலாளருமான ஏ.சந்திரமோகன் த.வி.ச - சிபிஐ மாவட்டச் செயலாளர் ஏ.மோகன், ஏஐகேஎஸ் மாவட்ட துணைத் தலைவர் பி.தங்கவேலு, ஏஐகேகேஎம்எஸ் மாவட்ட குழு உறுப்பினர் மோகன் ஆகியோர் கண்டன உரை ஆற்றினார்கள்.

# நகர்மயமாக்கம் – தலித் – பாட்டாளி சாதி ஒழிப்பு – மார்க்சியம்.

**இராமசந்திரன்**

**சாதியின் தோற்றமும்; இருத்தலும்**

சமூகத்தில் வேலைப் பிரிவினையைக் கட்டமைப்பது என்ற இயக்கப்போக்கில் சாதியக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது; பார்ப்பன புரோகிதர்கள் இந்தச் சாதியக் கட்டமைப்புக்கு தெய்வீக அங்கீகாரம் அளித்து அதை உயர்த்திப் பிடித்தனர்; காலப் போக்கில் அது மனிதர்களால் வேலைப் பிரிவினைக்காக உருவாக்கப்பட்ட ஒன்று என்ற நிலை மாறி அது ஒரு தெய்வீக உருவாக்கமாய் சித்தரிக்கப்படலாயிற்று; எனினும் அதன் இருத்தல் என்பது இன்னும் முழுமையாகத் தகர்க்கப்படாத கிராம நிலவுடைமைச் சமூகக் கட்டமைப்பில் வேர் கொண்டிருக்கிறதே தவிர அதற்கு வழங்கப்பட்ட தெய்வீக அங்கீகாரம் முதன்மையான காரணமல்ல என்பதை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

**தலித்துகளுக்கான தனிக் குடியிருப்பு – சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தீண்டாமை.**

தீண்டாமை சட்ட விரோதம் என அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறது. தீண்டாமையின் பல்வேறு வடிவங்களைச் சட்டம் தடை செய்திருக்கிறது. ஆனால் தலித்துகளுக்கு தனிக் குடியிருப்பு என்பது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தீண்டாமையாக இருக்கிறது. சாதிய ஒடுக்குமுறையின் மிக உச்சக்கட்ட ஒரு வெளிப்பாடாகவும் இருக்கிறது. அக்ரஹாரத்திற்கு கீழ்நிலையில் ஊர்; ஊருக்கு கீழ்நிலையில் சேரி என தலித்துகளுக்கு தனிக் குடியிருப்பு என்பது படிநிலை ஒடுக்குமுறை சாதியக் கட்டமைப்பை, பார்ப்பனிய சமூக ஒழுங்கை, நிலைநிறுத்துவதற்கான ஓர் ஏற்பாடு. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆளும் வர்க்கங்களால், ஆதிக்க சாதிகளால் பாதுகாக்கப்பட்டு வரும் ஓர் ஏற்பாடு. சாதியக் கட்டுப்பாடுகள் மீறப்படுமானால், உயர்சாதி இந்துக்களின் மௌனமான ஆதரவோடு, சாதி இந்துக்கள் தாக்குதல் நடத்துவதற்கும், சொத்துகளைச் சூறையாடுவதற்கும், தீயிட்டுக் கொளுத்துவதற்கும், இவ்வாறாக வன்முறை கொண்டு தலித்துகளை ஒடுக்கி வைப்பதற்கும், இன்று சாதி இந்துக்களுக்கு ஒரு வாய்ப்பாக பயன்பட்டுவருகிற ஏற்பாடு. தனிக் குடியிருப்பு என்பது அதோடு மட்டும் நிற்கவில்லை. தனிச் சுடுகாடு, சுடுகாட்டிற்கு தனிப் பாதை, பொதுவெளியில் சுதந்திரமாக புழங்குவதற்குத் தடை என நீண்டுகொண்டேயிருக்கிறது.

**தலித் விடுதலை – பாட்டாளி வர்க்க விடுதலை– கம்யூனிஸ்ட் கட்சி.**

ஆங்கிலேயர் வருகையை ஒட்டி "முதலாளித்துவத்தின் வருகையும் பெருவீத உற்பத்தியும் முதல் முறையாக சாதிக்கும், தொழிலுக்கும் இடையே ஒரு பிளவைக் கொண்டுவந்தது; ஒரு புதிய வர்க்கமாக தொழிற்துறைப் பாட்டாளி வர்க்கம் எழுந்தது. பாட்டாளி வர்க்கத்தின் முதல் தலைமுறை தோட்டங்கள், சுரங்கங்கள், துணி, சணல் ஆலைகள் இன்னபிறவற்றுக்கு அனுப்பப்பட்டனர்; அவர்களில் மிகப் பெரும்பாலோர், தலித், பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோராக இருந்தனர்; பின்னாளில் உயர்சாதிகளைச் சேர்ந்த உறுப்பி னர்களும் கூட இணைந்துகொண்டனர். இவ்வாறாக தொழிற்சாலைகள், சாதிகளை அழித்தொழிக்கும் உள்ளாற்றலை ஏந்திச் செல்லும் சமூகத் தொழிற்சாலைகளாகவும் கூட இருந்தன"(வினோத் மிஸ்ராவின் படைப்பிலிருந்து).

மக்கள் இயக்கங்கள் தோன்றின. கட்சிகள், அமைப்புகள் உருவாகின. எல்லாச் சாதிகளும் மாறுதலுக்கு உள்ளாகின. "தலித் மக்களும் வரலாற்றின் இயக்கப் போக்கில் சமூக நகர்வுகளையும், அறுதியிடலையும் நோக்கி வளர்ந்துள்ளனர். நேற்று அவர்கள் 'அரிசன்கள்' இன்று அவர்கள் 'தலித்துகள்' நாளை அவர்கள் பாட்டாளிகளாக மாறுவார்கள். தலித் மக்களின் உணர்வுகளும், காந்தியால் பாதுகாக்கப்பட வேண்டிய சமூகப் பிரிவு என்கிற அர்த்தத்தில் 'அரிசன்' என்று முன்வைக்கப்பட்ட அடையாளம் உதறப்பட்டு, உரிமைக்காகப் போராடும் 'தலித்' என்ற அடையாளமாய் வளர்ந்துள்ளது. (வேறு யாருமல்ல, அம்பேத்கர்தான் இந்த மாற்றத்திற்குப் பின்னுள்ள உத்வேகமூட்டும் உணர்வாக இருந்தவர்). இது மேலும் விவசாயத் தொழிலாளி எனும் உணர்வாய், இன்னும் மேலும் ஆட்சி அதிகாரம் கோரும் பாட்டாளி எனும் உணர்வாய் வளர்க்கப்பட வேண்டும். இதைச் சாதிப்பதுதான் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் வேலையுமாகும். (வினோத் மிஸ்ரா படைப்பிலிருந்து)

'தலித்', 'பாட்டாளி' இந்த இரண்டு வகையினமும், 'தலித் விடுதலை' 'பாட்டாளி வர்க்க விடுதலை' என்ற இந்த இரண்டு முழக்கங்களும் முதலாளித்துவச் சமூகத்தில் பிறந்தவைதான். ஆனால் இந்த இரண்டு பிரிவின் கட்டமைப்புகளும், வர்க்க நலன்களும், நோக்குநிலைகளும், இலக்குகளும் வெவ்வேறானவை. எனினும் சாதி ஒழிப்பு, ஜனநாயகம் என்ற பொதுப் புள்ளியில் இந்த இரண்டு பிரிவுகளும் சேர்ந்து செயலாற்ற முடியும்; சேர்ந்து செயலாற்ற வேண்டும்.

'தலித்' என்ற சொல் தொழிலாளி, உழைக்கும் விவசாயி, குட்டி முதலாளி எனப் பல்வேறுபட்ட வர்க்கப் பிரிவினரை

உள்ளடக்கிய பல்வேறுபட்ட பட்டியலினப் பிரிவினரை உள்ளடக்கிய ஒரு சமூகத் தொகுப்பைக் குறிக்கிறது. “பாட்டாளி” என்ற சொல் ஒரேயொரு வர்க்கத்தை, சாதிகளைக் கடந்த ஓர் ஒற்றுமையைக் குறிக்கிறது.

“வர்க்கம் என்பது சாதிகளைப் போல உடைபட்ட துண்டுகளால் ஆனதாக இல்லை; அப்படி இருக்கவும் முடியாது. தொழிற்சாலைக் கட்டமைப்பும், முதலாளித்துவமும் பாட்டாளி வர்க்க அடையாளம் உருப்பெறுவதற்கான நிலைமைகளை உருவாக்கியிருக்கின்றன. ஒரு கம்யூனிஸ்ட் கட்சி அதற்காக பாட்டாளி வர்க்கத்தை கூட்டு நடவடிக்கைகளில் அமைப்பாக்குவதோடு, அமைப்பாக்கப்பட்ட, அமைப்பாக்கப்படாத தொழிலாளர் வர்க்கத்தின் பல்வேறு பகுதியினர் இடையே உள்ள சாதி, மத, பேரினவாத தப்பெண்ணங்களை எதிர்த்துப் போராட வேண்டும்”. (வினோத் மிஸ்ரா படைப்பிலிருந்து)

**சாதியக் கட்டமைப்பும்; முதலாளித்துவச் சமூக வர்க்கக் கட்டமைப்பும்; நகர்மயமாக்கமும்.**

இடதுசாரி, அம்பேத்கரிய, பெரியாரிய இயக்கங்களின் ஒரு நூற்றாண்டு கால போராட்டத்தின் விளைவாக தமிழ்ச் சமூகத்தில் சமூக, பொருளாதார, அரசியல் நிலையில் சிற்சில மாற்றங்கள், முன்னேற்றங்கள் வந்திருந்தாலும், சாதிய இறுக்கத்தில் சில தளர்வுகள் தாண்டி, கிராமப்புரத்தில் ஊர்-சேரி என்ற பிரிவினை குறிப்பிட்டுச்சொல்லும்படியான எந்த மாற்றமும் இன்றி அப்படியே தொடர்கிறது. நினைவுக்கு எட்டிய காலத்திலிருந்து, இடைநிலைச் சாதியின் அல்லது தலித் சமூகத்தின் அதே உட்பிரிவின் சந்ததியினர்தான் அங்கு வழிவழியாக வாழ்ந்துவருகிறார்களே தவிர உட்பிரிவில் கூட குறிப்பிட்டுச் சொல்லும்படியான மாற்றம் ஏதும் நிகழவில்லை. ஒருவர் உலகின் எந்த மூலையில் இருந்தாலும், அவரது சொந்த கிராமத்துடனான பிணைப்புக்கு சாதியும், அது சார்ந்த பண்பாடும் அடிப்படையாக இருப்பது ஒரு முக்கிய காரணமாகும்.

கிராமங்களை விட நகரங்களில் வேகமாக நடைபெறும் முதலாளித்துவ தொழில்மயமாக்கம் சாதியக் கட்டமைப்பில் தளர்வுகளைக் கொண்டுவருவதோடு, அதனிடத்தில் முதலாளித்துவச் சமூக வர்க்கக் கட்டமைப்பை நிறுவுவதற்கான புறச் சூழலையும் உருவாக்குகிறது. ஆனால் இந்தப் போக்கு பலம் பெறுவதற்கு மாறாக நகரங்களுக்குள் சாதியக் கட்டமைப்பு மீண்டும் மறுவடிவம் பெறுவதைப் பார்க்கிறோம். சாதி பாகுபாடு கிராமப்புரங்களில் மட்டுமே இருக்கிறது; நகரமயமாக்கத்தின் காரணமாக இது குறைந்து விடும் என்ற கருத்தை முன்வைப்பது இந்திய யதார்த்தத்தை மிகப்பெருமளவுக்கு தவறாக பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். இங்கே, புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களிலும், ஐஐடி, ஐஐஎம் போன்ற உயர்கல்வி மையங்களிலும், மருத்துவ, பொறியியல் கல்லூரிகளிலும் தலித் மாணவர்களும் ஆய்வாளர்கள்/அறிஞர்களும் தொடர்ந்து பெரும் துன்புறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். இவ்வாறாக அழிவை நோக்கி அடியெடுத்து வைத்திருக்கிற சாதியக் கட்டமைப்பு முழுமையாக அழியவுமில்லை. புதிதாக உருவான முதலாளித்துவ சமூக வர்க்கக் கட்டமைப்பு முழுமையாக நிலைபெறவுமில்லை. ஏனிந்த நிலை? வரலாற்றின் ஒரு கட்டத்தில் எதிரெதிர் வர்க்கங்களாக இருந்த முதலாளித்துவ வர்க்கமும், நிலப்பிரபுத்துவ வர்க்கமும் இன்று கூட்டுச் சேர்ந்துகொண்டு, நிலச் சீர்திருத்தத்தை முற்றிலும் முடக்கிப்போட்டுவிட்டு, இன்னும் மோசமாக விவசாயிகளை நிலத்திலிருந்தும், மக்களை வாழ்விடங்களிலிருந்தும் வெளியேற்றிக்கொண்டும், பழைய/ சாதிய சமூக அமைப்பை பாதுகாத்துக்கொண்டுமிருக்கின்றன. இதனால்தான் இகக(மாலெ)வின் விவசாயத் திட்டம் “பாட்டாளி வர்க்கம் ... சுரண்டும் வர்க்கங்களை தூக்கியெறிய வேண்டுமானால், வர்க்கப் போராட்டத்தை கிராமப்புரங்களுக்கு எடுத்துச் செல்லாமல் இதைச் சாதிக்க முடியாது” என்று வலியுறுத்துகிறது.

**விவசாய கிராமப்புரத் தொழிலாளர் சங்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும்:**

கிராமப்புரத்தின் மீதான முழுக் கட்டுப்பாடும் - நிலம், பொருளாதாரச் செயல்பாடுகள், கோவில், ஊராட்சி அதிகாரம் என எல்லாவற்றிலும் - உயர் சாதி/ இடைநிலை சாதியைச் சார்ந்த கிராமப்புர முதலாளிகளிடம்தான் இருக்கின்றன. எனவே, விவசாய, கிராமப்புரத் தொழிலாளர்கள் நிலம், கூலி, கௌரவம், அரசியல் அதிகாரத்திற்காக கிராமப்புர முதலாளிகளை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. இந்தப் புறநிலை யதார்த்தம் காரணமாக விவசாய/கிராமப்புரத் தொழிலாளியாக இருக்கிற ஒரு தலித், விவசாய கிராமப்புரத் தொழிலாளர் சங்கத்தில் தன்னை இணைத்துக்கொள்கிறார். சாதிய தப்பெண்ணங்கள் காரணமாக பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகப்பின்னணியைச் சேர்ந்த விவசாய/கிராமப்புரத் தொழிலாளி முதலில் தயக்கம் காட்டுகிறார்; சங்கம் தனது வர்க்க நலனுக்கானது என்று புரிந்துகொண்டு பின்னர் தானும் இணைகிறார்.

தோழர் சீனிவாசராவ் ‘ஆரம்பத்தில் சாதி இந்துக்களான வாரதாரர்களும், குத்தகைதாரர்களும், சிறு விவசாயிகளும் விவசாயிகள் சங்கத்தை சரிவர புரிந்து கொள்ளாமல் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தனர்; விவசாயிகள் சங்கத்தை ஆதிதிராவிடர்களின் சாதி சங்கம் என்று நினைத்தார்கள்; சாதி வெறுப்பு அதிகமாய் இருந்தபடியால் விவசாயிகள் சங்கத்தின் கொள்கைகளையும், திட்டத்தையும் பற்றி அறிந்துகொள்ள அவர்களுக்கு காலதாமதமாயிற்று’ என தனது விவசாய சங்க அனுபவங்களை விவரிக்கிறார்.

**– தொடரும்**

# புதுச்சேரியில் கொந்தளிக்கும் அரசியல்; கூர்மை அடையும் மக்கள் போராட்டங்கள்!

2024 நாடாளுமன்றத் தேர்தலில் என் ஆர் காங்கிரஸ்- பாஜக கூட்டணி ஆட்சியை கேள்வி கேட்கும் மக்கள் கோரிக்கை, பல ஆண்டுகளாக மூடி கிடக்கும் ரேஷன் கடைகளை திறப்பது எப்போது? என்பதுதான். தேர்தலில் என் ஆர் காங்கிரஸ்- பாஜக கூட்டணியின் வேட்பாளர் பாஜக அமைச்சர் நமச்சிவாயத்தை எதிர்த்து களம் கண்ட இந்தியா கூட்டணி வேட்பாளர் வைத்திலிங்கத்தை சுமார் 2 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து ,மக்கள் கோபத்தை வெளிப்படுத்தினார்கள்.

புதுச்சேரியில் ஏறக்குறைய அனைத்து பொதுத்துறை, கூட்டுறவுத்துறை நிறுவனங்களும் முழுமையாக மூடப்பட்டு விட்டன. பாரம்பரிய பஞ்சாலைகளான ரோடியர், பாரதி, சுதேசி, திருபுவனை கூட்டுறவு பஞ்சாலை, காரைக்கால் ஜெயபிரகாஷ் நாராயண் பஞ்சாலை என அனைத்தும் மூடி கிடைக்கின்றன. பாப்ஸ்கோ, பாசிக் போன்ற வணிக பொதுத்துறை நிறுவனங்கள் , மாநிலத்தின் மிகப்பெரிய கூட்டுறவு அங்காடி அமுதசுரபி, கூட்டுறவு கைத்தறி நிறுவனங்களான பாண்பேப், பாண்டெக்ஸ் ஆகியவன ஒட்டுமொத்தமாக நலிவடைய செய்யப்பட்டு விட்டன. அரசு நிறுவனங்களில் பணி புரிந்த பல்லாயிரக் கணக்கானோர் வேலை இழந்துவிட்டதால் என்ஆர் காங்கிரஸ்- பாஜக கூட்டணி அரசாங்கம் அரசியல் ரீதியாக தோல்வி அடைந்து விட்டது. புதுச்சேரி மாநிலத்தில் மூலப் பொருள்கள் வளம் இல்லை. மானியங்கள், அரசு சலுகைகள் வழியாக நடைபெற்ற உற்பத்தி ஆலைகள், சரக்குகள், சேவைகள் வரிகள் நடைமுறைக்கு வந்த பின்னர் மாநிலத்தை விட்டு பெரும்பாலும் வெளியேறி விட்டன. வேலையில்லாமல் இருக்கும் இளைஞர் எண்ணிக்கை இரண்டு லட்சத்தைத் தாண்டி உள்ளது . அதுமட்டுமின்றி பத்தாண்டுகளுக்கும் மேலாக அரசு துறைகளில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்கள் காலியாக உள்ளன. பணியில் சேர்ந்திடும் வயது வரம்பை பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தாண்டிவிட்டதால் அவர்களுக்கு அரசு வேலைகள் கிடைக்கும் வாய்ப்புகளும் இல்லை. வீழ்ச்சியடைந்துவிட்ட பொருளாதார நடவடிக்கைகளை மீட்டெடுக்க சீரழிந்த போதை சுற்றுலாக் கொள்கையை அரசு பின்பற்றுவதால் மக்கள் மத்தியில் அதிருப்தியை எதிர்கொள்கிறது.

மாநிலத்தின் மிகப்பெரிய இரண்டாவது அரசுத்துறையான மின் துறையை ஒன்றிய பாஜக அரசு தனியாருக்கு விற்பனை செய்ய முடிவு செய்து மாநில அரசை நிர்பந்தம் செய்து வருகிறது. மின்துறை சொத்து மதிப்பு சுமார் 2000 கோடி ரூபாய். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணி புரியும் துறை இது. மின் துறை தனியார் மையத்திற்கு எதிராக இடதுசாரி கட்சிகள் சிபிஐ(எம்எல்), சிபிஐ(எம்) சிபிஐ கூட்டுப் போராட்டங்களுக்கு திட்டமிட்டன பின்னர் திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளும் இணைந்து கடந்த 2.9.2024ல் தலைமைச் செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தின. மின்துறை தனியார் மயத்தை திரும்பப் பெற வலியுறுத்தி 18.9.2024ல் மாநிலம் தழுவிய முழு கதவடைப்பு நடத்தப் பட்டது. கதவடைப்பின் போது நடைபெற்ற மறியலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் கைதாகினார்கள்.

தற்போது மாநில மக்களையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் வகையில் புதிய கல்விக் கொள்கைக்கு ஆதரவாக 'ஒரே நாடு, ஒரே மொழி' என்ற ஆர் எஸ் எஸ் கருத்தியலை திணித்திடும் வகையில் என்ஆர் காங்கிரஸ் -பாஜக கூட்டணி அரசாங்கம் மாநிலம் முழுவதும் உள்ள அரசு பள்ளிகளில் நடுவண் இடைநிலை, மேல்நிலை கல்வி வாரியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி தாய்மொழி வழிக் கல்வியை மூடிவிட்டது. அரசாங்கத்தின் இந்த முடிவு மாணவர்கள், இளைஞர்கள், பெற்றோர்கள் மத்தியில் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது.


சிபிஐஎம்எல் முன்முயற்சியால் தமிழ்க் கல்வி இயக்கம் என்ற பெயரில் அனைத்து தரப்பு ஜனநாயக சக்திகளையும் ஒருங்கிணைத்து தாய்மொழிக்கான போராட்ட இயக்கம் துவங்கி உள்ளது

அனைத்து முனைகளிலும் தோல்வி அடைந்து விட்ட என் ஆர் காங்கிரஸ் பாஜக கூட்டணி அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட்ட அலைகள் மாற்றத்தை நோக்கி வீச தொடங்கியுள்ளன.

–சோபா

# தோழர் சீத்தாராம் யெச்சூரி நினைவேந்தல்!

28.09.24 அன்று டெல்லி நடைபெற்ற நிகழ்ச்சியில் இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர்






23.09.24 அன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் ஆசைத்தம்பி

# தோழர் கேண்டீன் மணிக்கு செவ்வணக்கம்!

தோழர் தண்டபாணி சென்னை வருமானவரி அலுவலகத்திலுள்ள உணவு விடுதியில் (கேண்டீன்) சமையலராக வேலை பார்த்தார். அப்போதிருந்த ஜனநாயக ஓட்டல் தொழிலாளர் சங்கத்தில் தீவிரமாகச் செயல்பட்டார். பின்னர் அந்த சங்கம் ஏஐசிசிடியுவுடன் இணைக்கப்பட்டது. ஓட்டல் தொழிலாளர்களின் கௌரவத்திற்கும் நியாயமான கூலிக்காகவும் போராடினார். 1970களில் போர்க்குணமிக்க ஓட்டல் தொழிலாளர்கள் போராட்டங்கள் நக்சல்பாரி பாரம்பரியத்திலிருந்து வந்த தோழர் பி.வி. சீனிவாசன் (எ) கணேசன் போன்ற இகக(மாலெ) தலைவர்களால் கட்டமைக்கப்பட்டது.

கேண்டீன் மணி என பரவலாக அறியப்பட்ட தோழர் தண்டபாணி புரட்சிகர அரசியலால் ஈர்க்கப்பட்டு இகக(மாலெ)யில் இணைந்தார். சென்னையில் நடைபெற்ற இகக(மாலெ) மற்றும் ஏஐசிசிடியுவின் அகில இந்திய மாநாடுகள், மாநில மாநாடுகளில் அவர் தோழர்களுக்கு ருசியான உணவு சமைத்து உரிய நேரத்தில் பரிமாறுவார். அவருடைய விருந்தோம்பலை இன்றைக்கும் தோழர்கள் நினைவு கூர்வார்கள். அவர் தனது 72வது வயதில் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். தோழர் கேண்டீன் மணியைப் பிரிந்து வாடும் அவரின் மனைவி, மகள் மற்றும் மகனுக்கும் தோழர்களுக்கு இகக(மாலெ) ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. தோழரின் இறுதி நிகழ்ச்சியில் இகக(மாலெ) தோழர்களுடன் தமிழ்நாடு மாநில நிலைக்குழு உறுப்பினர் தோழர் இரணியப்பனும் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள். தோழர் கேண்டீன் மணிக்கு செவ்வணக்கம்.



MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.10.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# மக்கள் கோரிக்கைப் போராட்டங்கள்




திருவிடைமருதூர்




புதுக்கோட்டை




Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh